Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

ஈழநாடு

EELA NADU

National TAMIL DAILY

தேசிய தினசரி

போன் 389

தபாற் பெட்டி எண்: 49

மலர் 3 யாழ்ப்பாணம், பிலவ ஆடி 6 ஆம் நாள் ஸபர் 7 (21-7-61) வெள்ளிக்கிழமை இதழ் 135

நீங்கள் அணியும் ஆடைகள்
தூய வெண்மையாகத் திகழவேண்டுமாஞல்
இன்றே!
டொலர் அடையாளமிட்ட
நீலம் வாங்கி உபயோகியுங்கள்.
விநியோகஸ்தர்கள்:
டொலர் கோப்பரேஷன்
14, டாம் வீதி, கொழும்பு.

இந்திய ஜனதிபதி

ராஜன்பாபு தேகநிலை

இரத்தமாக வாந்தி எடுத்தார்

புதுடில்லி, ஜூலை 29

இந்திய ஜனதிபதி டாக்டர் ராஜேந்திரபிரசாத்தின் உடல்நிலை கவலையளிப்பதாய் இருப்பதாக இன்றிரவு வெளியான அறிக்கை கூறுகிறது. டாக்டர் பிரசாத் இன்று திடீரெனச்சுகவீனமுற்றார்.

ஜனதிபதி, இரத்தஅழுத்தத்தால் வருந்துவதாயும், இரத்தமாக வாந்தியெடுத்ததாயும் முன்பு வந்த செய்தி அறிவித்தது. 6 வைத்திய நிபுணர் கொண்ட ஒரு குழு, வெகு சிரத்தையுடன் அவருக்குச் சிகிச்சையளித்து வருகிறது.

ஜனதிபதி திடீரெனச் சுகவீனமுற்றதின் காரமாய் அவரது ஹைதராபாத் விஜயம் ரத்துச் செய்யப்பட்டது.

இவ்வருடம் கிளரிக்கல் சோதனை இல்லை

கொழும்பு, வியாழன்

ஜெனரல் கிளரிக்கல் சேர்விஸ் சோதனையோ ரெயில்வே கிளரிக்கல் சேர்விஸ் சோதனையோ கிளரிக்கல் கிரேடுகளுக்கான சோதனையோ இவ்வருடம் நடத்துவதில்லையென்று திறைசேரி தீர்மானித்துள்ளது. ஊழியரின் எண்ணிக்கையைக் கூட்ட எந்தவித ஏற்பாடும் செய்யப்படவில்லை. 55-வது வயதில் ஒய்வு பெறுபவர்களின் காலிஸ்தானங்களை நிரப்புவதற்காக புதிய உத்தியோகஸ்தர்களை எடுப்பதில்லை எனவும் திறைசேரி தீர்மானித்துள்ளது. இவ்வித விதியின் கீழ், ஒய்வு பெறுபவர்கள் செய்து வந்த வேலையை தற்பொழுது இருக்கும் ஊழியர்களிடம் பகிர்ந்து கொடுப்பதென முடிவு செய்யப் பட்டுள்ளது.

டுனிஷிய கைகலப்பு
36 பேர் பலி

பாரிஸ், ஜூலை 20

இன்று டுனிஷியாவில் பிரெஞ்ச விமானப்படைக்கும், டுனிஷிய வீரர்களுக்குமிடையில் ஏற்பட்ட கைகலப்பில் 33 டுனிஷியர்கள் கொல்லப்பட்டனர். 125 பேர் காயமடைந்தனர். 50 பேர் கைதாயினர். பிரெஞ்ச தரப்பில் 3 வீரர்கள் மாண்டனர். 33 பேர் காயமடைந்தனர்.

யாழ்ப்பாணம் இருளில் மூழ்கியது

யாழ்ப்பாணம், வெள்ளி

நேற்று யாழ்ப்பாணம் இருளில் மூழ்கியது. வழக்கம் போல் மின்சாரக் கோளாறே இதற்குக் காரணம். ஒருமணி நேரத்திற்கும் மேலாக வெளிச்சம் இன்றி கஷ்டம் ஏற்பட்டது. மாலை 6-45க்கு அணைந்த விளக்குகள், இரவு 7-50க்கு தான் மீண்டும் பிரகாசம் பெற்றன. நேற்று முன் தினமும்சுமார் அரைமணி நேரம் மின்சார விளக்குகள் எரியவில்லை என்பது குறிப்படத்தக்கது.

கட்சியிலிருந்து ராஜினமா செய்வராம்

கொழும்பு, வியாழன்

அநுராதபுரம் பாதுகாப்பு சபைக்கு தான் குறிப்பிடும் பிரதிநிதியை அரசாங்கம் அலட்சியம் செய்தால் தாம் கட்சியிலிருந்து ராஜினமாச் செய்யப்போவதாய் அநுராதபுரம் எம். பி. திரு. எஸ். கொடகே பிரதமரிடம் கூறியிருக்கிறார். தமது தொகுதியிலுள்ள வாக்காளர்களின் விருப்பத்திற்கேற்பவே இவ்விதம் தாம் தீர்மானித்திருப்பதாயும் அவர் கூறியிருக்கிறார்.

ஆங்கிலத்தில் மட்டும்!

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் பெரியாஸ் பத்திரிச்சபையின் கூட்ட அறிக்கைகள் தொடர்ந்தும் ஆங்கிலத்தில் மாத்திரம் வெளியிடப்பட விருப்பதாகத் தெரிகிறது சென்ற அறிக்கை தமிழிலும் வெளிவந்தது ஞாபமிருக்கலாம்.

இவ்வறிக்கைகளை தமிழில் வெளியிடுவதில் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டு வெளியிடப்பட்ட சில சொற்களே உபயோகிக்க வேண்டிய நிர்ப்பந்தமிருப்பதாகவும் இதனால் இதனை மொழிபெயர்க்கக்கூடிய வசதிகள் இல்லாமையுமே இதற்குக் காரணங்களாக இருக்கலாமெனச்சொல்லப்படுகிறது.

என். கியூ. டயஸ் இங்கிலாந்து செல்வார்

கொழும்பு, வியாழன்

பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. என். கியூ. டயஸ் வைத்திய சிகிச்சை பெறுவதற்காக இம்மாதம் 29-ம் திகதி ஏயர் சிலோன் விமானம் மூலமாக இங்கிலாந்து செல்வாரெனத் தெரிகிறது.

ஒரே பாடசாலையில் மூன்று மொழிகளிலும் போதனை

கல்விக் கமிஷனுக்கு கல்லூரி அதிபர் மகஜர்

கொழும்பு, வியாழன்

சாத்தியமான இடங்களிலெல்லாம் ஒரே பாடசாலையில் மூன்று மொழிகளிலும் போதிக்கப்படவேண்டும் என கண்டி, டிரினிட்டிகல்லூரி அதிபர் திரு. ஸி. ஜே. கே. ஆர்லாப் கல்விக்கமிஷனுக்கு அனுப்பியுள்ள ஒரு மகஜரில் கூறியிருக்கிறார். ஒரே பாடசாலையில் கல்வி கற்று ஒன்றுக

(5-ம் பக்கம் பார்க்க)

கருவாட்டு இறக்குமதியில் பெரும் ஊழல்

ஜனப்பிரதிநிதிகள் சபையில் மந்திரி விளக்கம்

கொழும்பு, வியாழன்

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் கருவாட்டில் 40 சதவிகிதம் மணல் கலந்தாய் இருக்கிறது என வர்த்தக மந்திரி திரு. டி. பி. இலங்கரத்ன ஜனப்பிரதிநிதிகள் சபையில் கூறினர். இறக்குமதி வர்த்தகத்திலேயே கருவாட்டு இறக்குமதியில்தான் அதிக ஊழல் இருப்பதாயும் மந்திரி கூறினர். கருவாட்டு இறக்குமதி வர்த்தகர்கள் அனைவரும் இலங்கையரல்லாதார் என்றும், இந்தியாவிலுள்ள ஏற்றுமதியாளர்களுடன் அவர்கள் நெருங்கிய தொடர்பு கொண்டவர்கள் என்றும், இதனால் பொய்யான விலைகளை அனுப்பி இந்தியாவுக்குப் பனத்தை அனுப்ப அவர்களுக்குச் சாத்தியமாய இருக்கிறது என்றும் மந்திரி கூறினர்.

பிரதேச சபைகள்

அடுத்த நிதிவருடத்தில் நிறுவப்படும்

கொழும்பு, வியாழன்

பிரதேசசபைகள் நிறுவுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிய வருகிறது.

அடுத்த நிதிவருடத்தில் ஸ்தலஸ்தாபன அமைச்சின் செலவுத்திட்டத்தில் பிரதேச சபைகள் நிறுவுவதற்கான உத்தேச செலவுத் தொகையும் சேர்க்கப்பட்டுள்ளது.

நடப்பு ஆண்டின் வரவுசெலவுத் திட்டத்திலும் ஸ்தலஸ்தாபன அமைச்சின் செலவினங்களின் கீழ் பிரதேச சபைகள் நிறுவுவதற்கென அடையாள மான்யம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அடுத்த நிதிவருடத்துக்கான ஸ்தலஸ்தாபன அமைச்சின் உத்தேச செலவினதிட்ட இன்னும் இறுதிவடிவம் பெறவில்லையாதலால் பிரதேச சபைகள் அமைப்பதற்கு உத்தேசச் செலவுதொகை விபரம் தெரிவிக்கப்படவில்லை. இம்முறை பிரதேச சபைகள் அமைப்பதற்கென்று அடையாள மான்யம் ஒதுக்கப்பட்டுள்ளது.

சில காலத்துக்கு முன்னரே பிரதேசசபைகளுக்கான திட்டம் தயாரிக்கப்பட்டுவிட்டது.

அரசாங்க அதிபர்களின் பொறுப்பில் உற்பொழுதுள்ள மாகாண நிர்வாக அலுவல்கள் பலவற்றை இப் பிரதேசசபைகள் தன் பொறுப்பில் ஏற்றுக் கொள்ளும். பிரதேச அபிவிருத்தி வேலைகளும் இச்சபைகளிடமே ஒப்படைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பிரதேசசபைகளுக்கு அங்கத்தவர்கள் பொது மக்களால் தெரிவு செய்யப்படுவார்கள். இப்பொழுது மாகாண அரசாங்க அதிபர்களாக இருப்பவர்கள் அந்தந்தப் பிரதேச சபைகளின் காரியதரிசியாகக் கடமையாற்றுவார்கள்.

பாடசாலைக்கு செல்லாத ஆசிரியர்கள்மீது கடும் நடவடிக்கை

கல்வி டைரக்டர் அறிவிப்பு

கொழும்பு, வியாழன்

சிறு காரணங்களுக்காக பாடசாலைக்குச் செல்லாமலிருக்கும் ஆசிரியர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க கல்வி டைரக்டர் தீர்மானித்துள்ளார்.

சராசரி ஆசிரியர்கள், மாணவர்களைப்பற்றி அக்கறைப்படாது தமது காஷுவல் லீவுகளையும், சுகவீன காரணங்களுக்கான லீவுகளையும் முற்றிலும் உபயோகப்படுத்திவிடுவதாக தலைமையாசிரியர்கள் புகார் செய்திருப்பதாக கல்வி அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அரசாங்க,வித்தியாதிபதியின் கீழ் இயங்கும் பாடசாலைகளிலுள்ள ஆசிரியர்களிடையே அதிகமாக வருகைக் குறைவு இருந்து வருவதாகவும் இந்த நிலை பாடசாலை நிர்வாகத்தை சீர்குலையச் செய்து பாடசாலை நேரத்தையும் வீணாக்கின்றது எனவும் அவர் தெரிவித்தார்.

ஆசிரியத் தொழிலில் உள்ள ஒருவர் ஒவ்வொரு நாளும் பாடசாலைக்குச் செல்வது அவசியம். கல்விப் பயிற்சிக்கு இது பெரிதும் உதவும் எனபதை ஆசிரியர்கள் கருத்திற்கொள்ள வேண்டும் என்பது பற்றி அவர்கள் அறிவுறுத்தப்படுவார்கள் எனத் தெரிகிறது.

வரிவிளம்பர விகிதங்கள்

ஜனனம், திருமணம், மரண அறிவித்தல், வீடு வளவு விற்பனவு, தேவை மற்றும் வாங்கவோ, விற்கவோ இது போன்ற சகல அறிவித்தல்களும் 'ஈழநாடு' பத்திரிகையில் வரிவிளம்பரம் செய்ய ஏற்றுக்கொள்ளப்படும்.

முதல் 20 வார்த்தைகளுக்கு ரூ.3-00. மேற்பட்ட ஒவ்வொரு வார்த்தைக்கும் மேலதிகமாக 10 சதம் அறவிடப்படும்.

உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம். கீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனாம்.

வைத்தியர் பரிபூரணநந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி: யாழ்ப்பாணம்.

கேள்விப்பத்திரம்

வடபகுதி விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சமாச சுன்னாகச் சேமச்சாலையில் இரும்பால் வெங்காயப் பட்டடைகள் போடுவதற்கு டி சமாசத் தலைவர் கேள்விப்பத்திரங்கள் அழைக்கின்றார். கேள்விப் பத்திரங்கள் தலைவர் வடபகுதி விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சமாசம், 111, பிரதான வீதி, யாழ்ப்பாணம் என விலாசமிட்டு பதிவுத்தபாலில் இடதுபக்க மூலையில் வெங்காயப் பட்டடைக் கேள்விப்பத்திரம் என எழுதி 26-7-61க்குமுன் கிடைக்கக்கூடியதாக அனுப்பவேண்டும். விபரங்கள் டி சமாசத்தில் காலை 9 மணிக்கும் மாலை 4 மணிக்கும் இடையில் பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், 19-7-61. **வை. மகேசன்,** தலைவர்.

NOTICE

Money to invest on good and sufficient security of immovable property within Municipal, Urban or Town Council Limits in the Northern Province on primary Mortgage on interest varying from 8 to 10 persent on sums varying from 15, 20, 25 or 30 thousand rupees. Interest payable monthly or quarterly.

Apply personally to C. Subramaniam Proctor S. C. & Notary Public between 8 a. m. and 12 noon, at 17, Front Street, Jaffna.

விளம்பரம்

வடமாகாண மாநகர சபை, பட்டின சபை அல்லது பட்டின சங்க எல்லைக்குள் இருக்கும் அசைவற்ற ஆதனங்களுக்கு, 8 தொடங்கி 10 சத வீகித வட்டியில் 15, 20, 25 அல்லது 30 ஆயிரம் ரூபாய் முதலாவது ஈட்டுக்குக் கொடுக்கப்படும்.

மாதமொரு முறை அல்லது மூன்று மாதத்துக்கு ஒரு முறை வட்டி கட்டலாம்.

விரும்பியவர்கள் புரக்டர் ஸ்ரீ. சுப்பிரமணியம் அவர்களிடம் நேரில் விண்ணப்பிக்கவும். விலாசம்: 17, புறன்ட் வீதி, யாழ்ப்பாணம். நேரம்: காலை 8 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை.

தேவை

தெல்லிப்பளை, மானிப்பாய், கரவெட்டி, பளை, சாவகச்சேரி, வவுனியா, கிளிநொச்சி முதலிய இடங்களுக்கு இன்ஸ்பெக்டர்களுக்குக் கீழ் கடமை புரிய "பீல்ட் ஒவ்விசர்" களும் தலைமைக் கந்தோருக்குத் தட்டெழுத்துக் குமாஸ்தாக்களும் தேவை. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். —அகில இலங்கை பெனிவிற் இன்சூரன்ஸ் கம்பனி, 33 ஏ, (மேல்மாடி) ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்

தேவை

எங்கள் மோட்டார் கராச்சிக்கு ஒரு ஸ்ரோர் கீப்பரும், கிளாக்கும், ஒரு காவல்காரனும் தேவை. பிணைப்பணம் ஸ்ரோர் கீப்பருக்கு ரூ. 1500. சம்பளம் மாதம் ரூ.150. காவல்காரன் பிணைப்பணம் ரூ. 250, சம்பளம் மாதம் ரூ. 60. தகுதியுடையவர்கள் விண்ணப்பிக்கவும். — காரியதரிசி, கைத்தொழில் பொறியியல் சங்கம், 14, சப்பல் வீதி, யாழ்ப்பாணம்.

பணம் இருந்தும்...!

முள்ளியவளை, புதன்

விளையாட்டுத்திடல் அமைப்பதற்கென அரசினரால் இரண்டாயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தும், அப்பணத்தைக் கொண்டு இதுவரை எதுவித நடவடிக்கையையும், முள்ளியவளை கிராமச்சங்கத்தினர் எடுக்கவில்லை எனக் கூறப்படுகிறது.

அராலி கொலை வழக்கு

சுப்ரீம்கோரட்டுக்கு பாரப்படுத்தப்பட்டது

யாழ்ப்பாணம், வியாழன் 1961ம ஆண்டு மே மாதம் முதலாம் திகதி இராமன் முத்தன் என்பவரைக் கொலை செய்ததாக அராலி வடக்கைச் சேர்ந்த கணபதி நாகமணி, கணபதிகந்தையா, ஆறுமுகம் மார்க்கண்டு ஆகியோர்மீது குற்றஞ் சாட்டி சங்கானைப் பொலிசைச் சேர்ந்த உதவி இன்ஸ்பெக்டர் திரு. கே. குமாரிலை யாழ்ப்பாணம் மாஜிஸ்ரேட் கோர்ட்டில் தொடரப்பட்ட வழக்கை நீதவான் திரு. அரசுவால்டன் சுப்பிரீம் கோர்ட்டுக்குப் பாரப்படுத்தி நேற்று மாஜிஸ்ரேட் கோர்ட்டு விசாரணைகளை முடித்துவைத்தார்.

திரு. ஆர். விஸ்வநாதனின் அனுசரணையுடன் திரு. டி. கணேசலிங்கம் எதிரிகளின் சார்பில் ஆஜராகியிருந்தார்.

கொலை வழக்கில் விடுதலை

பருத்தித்துறை, புதன்

கரவெட்டியைச் சேர்ந்த சிற்றம்பலம் என்பவரைக் கொலை செய்ததாக வி. வேலுப்பிள்ளை ஏ. சிவதாசன், கே. செல்லத்துரை ஆகியோர் மீது தொடரப்பட்ட வழக்கில் நீதிபதி திரு. கே. லத்துவகெட்டி எதிரிகள் மூவரையும் விடுதலை செய்து தீர்ப்பளித்தார். எதிரிகள் சார்பில் சென்ட்டர் எஸ். நடேசன் ஆஜரானார்.

அம்பாரையில் பஸ் பிரயாணக் கஷ்டம்

அம்பாரை, வியாழன்

இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான 15 பஸ்களும் பழுதடைந்ததால் புதன் கிழமை அம்பாறைக்கும் இங்கினியாகலவுக்கும் இடையில் பஸ் போக்கு வரத்து துண்டிக்கப் பட்டது. இதனால் பிரயாணிகள் மிகவும் கஷ்டத்துக்குள்ளாகினர்கள்.

லண்டனில் வாங்கித் திருத்தி அமைக்கப்பெற்ற 15 பஸ்கள் டிப்போவில் உள. இந்த பஸ்கள் 10 பிரிவுகளுக்குச் சேவை செய்கின்றன.

பஸ்பழுதடைவதினால் இந்த நாட்களில் பஸ்சேவை அடிக்கடி துண்டிக்கப்படுவது வழக்கமாகிவிட்டது.

இலட்சிய இலக்கியங்கள் தோன்றவேண்டும்

சைவாசிரிய கலாசாலை இறுதிநாள்

தமிழ்விழாவில் விரிவுரைகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

"தமிழ் விழாக்கள் தமிழ் வளர்ச்சிக்கும் ஆத்ம சாந்திக்கும் உறுதுணையானவை. இவ் விழாக்களைக் கொண்டாடுவதால் மனவெழுச்சியும் புத்துணர்ச்சியும் கிடைக்கின்றன" என்றுயாழ்ப்பாணம் சைவாசிரியகலாசாலைத் தமிழ்வார மூன்றாம் நாள் நிகழ்ச்சிக்குத் தலைமைதாங்கிய திரு. செ. சரவணமுத்து கூறினர்.

வித்துவான் க. கணபதிப் பிள்ளை 'இலட்சிய இலக்கியம்' என்பது பற்றிப் பேசும்போது கூறியதாவது:-

இக்காலத்தில் எண்ணிறந்தோர் கவிதைகள் ஆக்குகின்றார்கள். சிறுகதை, நாவல், இலக்கியம் சமைக்கின்றார்கள். இப்படைப்புக்கள் ஒரு நல்ல இலட்சியத்துக்கு மனிதனை வழிநடத்தாவிடில் இலக்கியத்தின் இலட்சியம் பூரணமடையமாட்டாது. வெறும் பொழுது போக்காய்—சிலவேளை இலட்சியமற்ற வாழ்வுக்கு வழிநடத்துவதாகவும் மாறிவிடும். இன்று கவிதைகள் அதிகரித்துள்ளன. இலட்சியமோ, அழகோ அற்ற கவிதைகளே அநேகம். பிரபல கவிஞர்களின் கவிகள் கூட அநுபவத்தின் உச்சியில் நின்று பாடப்பட்டுள்ளன. யுத்தக் கொடுமையில் தன் துயர்பாடவந்த ஏழைக் கிழவன் குடியரசு வேண்டும், சுதந்திரக் கொடி பறக்க வேண்டும், எனப் பாடுபடுவது தான் கட்டிய மனல் வீட்டை அழித்த கடலே அதன் கொடுமையை அறிந்தபின்னும் சிறு குழந்தை புகழ்ந்து பாடுவது போன்றவை, இதற்குத் தக்க உதாரணங்களாம். இவை போன்ற இலட்சிய இலக்கியமற்ற காரணம் அழகுக் கூடாக இலட்சியத்தை எடுத்தியம்பாதபடியால் என்க.

இம் மூன்றும் நாள், பிற்பகல் நிகழ்ச்சிக்கு இலக்கிய விரிவுரையாளர் திரு. பே. எஸ். செல்வநாதர் தலைமை தாங்கினர்.

திருவாளர்கள், அ. ஏ. இராஜக்கோன், ம. விக்டர் ஆகியோர் முறையே "தமிழின் பெருமையும் தற்கால நிலைமையும்" "கம்பன் கவித்திறன்" என்னும் பொருள்கள் பற்றிச் சொற்பெருக்காற்றினர்கள்.

விழாவில் திரு. கே. ஜீவரத்தினமும், திரு. நா. இராமலிங்கமும் சொற்பொழிவாற்றினர்.

ஈற்றில் செல்வி பரம். பரமேஸ்வரியின் இன்னிசைக் கச்சேரியுடனும் செயலாளரது நன்றியுரையுடனும் தமிழ்வார நிகழ்ச்சிகள் நிறைவெய்தின.

சிமெந்து விற்பனை

பருத்தித்துறை, செவ்வாய்

புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் மாதந்தோறும் கிடைக்கும் 2000 பாக்கட் சிமெந்துகளையும் சமாசத்தில் அங்கம் வகிக்கும் 11 பண்டகசாலைகட்கும் விற்பனைக்கு விநியோகிப்பதெனவும் விநியோகத் தொகையை கூப்பன்களின் விகிதாசார அடிப்படையில் நிர்ணயிப்பதெனவும் சமாஜ நிர்வாகசபைக் கூட்டத்தில் தீர்மானித்துள்ளது.

உத்தரவின்றி மரம் வெட்டினர் ரூ 25 அபராதம்

பருத்தித்துறை, புதன்

உத்தரவின்றி காட்டு மரங்களைத் தறித்து விறகாக வண்டிலில் ஏற்றிவந்ததாக குற்றம் சாட்டி பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கில் துன்னாலை தெற்கைச் சேர்ந்த [illegible]கன் இராமு என்பவருக்கு [illegible]ருத்துறை நீதி[illegible]ருபாய் அபராதம் வி[illegible]ர்.

இதே குற்றத்தின்பேரில் அம்பனைச் சேர்ந்த மு. கணபதிப் பிள்ளை என்பவருக்கும் ரூபா 25 அபராதம் விதிக்கப்பட்டது. இவ்வழக்குகளை பதில் நீதிபதி முடிக்குரிய புரக்டர் திரு. கே. இரத்தினசிங்கம் விசாரணை செய்தார்.

தென்றல் விளையாட்டுக் கழகத்துக்கு வெற்றி

நவாலி, புதன்

நவாலியூர் தென்றல் விளையாட்டுக்கோஷ்டிக்கும், அச்சுவேலி விளையாட்டுக் கோஷ்டிக்கும் இடையில் நவாலியூர் விளையாடுத் திடலில் ஒரு மணி நேரமாக நடைபெற்ற தாச்சி விளையாட்டுப போட்டியில் நவாலி தென்றல் கோஷ்டியினர் திறமையுடன் விளையாடி 14 : 1 ஆட்டங்களால் வெற்றி பெற்றனர். திரு. செ. தேவதாசன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

10,000 மக்கள் புகழ்வது !

டொலர்

ALUMINIUM INDUSTRIES (CEYLON) LTD.
ONE DOLLAR
DOLLAR BRAND

டொலர்

அலுமினியம்

★ அழகு
★ மாற்று உயர்ந்த அலுமீனியம்
★ சுத்தம்
★ தாய் நாட்டுக் கைத்தொழிலுக்கே பெருமை தருவது
★ நவீன முறையில், முற்போக்கான அதிசயமுறையில் செய்யப்படுவது
★ உறுதி, உழைப்பு

டொலர் பவுணைப் பார்த்து வாங்கி மகிழுங்கள்!

தயாரிக்குமிடம்:

அலுமினியம் இன்டஸ்ரீஸ் லிமிட்டெட்,

மாவிட்டபுரம், யாழ்ப்பாணம்.

"காஷ்மீர்மீது புதிய தாக்குதல் நடந்தால் இந்தியா எதிர்க்கும்

தன்னைப் பாதுகாக்கும் துணிவு பாரதத்துக்கு உண்டு' —பிரமர் நேரு

ஜம்மு, ஜூலை 20

"காஷ்மீர் மீது புதிய தாக்குதல் எதுவும் நடைபெறுமானால் அதை இந்தியா சகித்துக் கொண்டிருக்காது. புதிய தாக்குதல் எதையும் இந்தியா எதிர்க்கும்" என்று இந்தியப் பிரதமர் திரு. நேரு நேற்று காஷ்மீர் லால்செளக்கில் நடைபெற்ற மாபெரும் பொதுக் கூட்டத்தில் பேசுகையில் அறிவித்தார்.

"எல்லாருடனும் அமைதியாகவும், நேசமாகவும் வாழவே பாரதம் விரும்புகிறது" என்று அவர் கூறினர். 70 நிமிஷ நேரம் பேசிய பிரதமர் நேரு மேலும் பின்வருமாறு குறிப்பிட்டார்:—

பாகிஸ்தானுக்கு நாச ஆயுதங்களைக்கூட அமெரிக்கா தாராளமாகக் கொடுக்கட்டும். இந்தியா அபிவிருத்தி குறைந்த நாடாக இருந்தபோதிலும் தன்னைத்தானே பாதுகாத்துக் கொள்ளும் சக்தியும் துணிவும் அதற்குண்டு. இந்தியா தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்கான ஆயுதங்களை வைத்திருக்கிறது. ஆயுதங்களுக்கு மேலாக தன்னைத்தானே பாதுகாத்துக்கொள்ளும் உறுதியும், நெஞ்சில் துணிவுமுண்டு. ஆனால் எந்த வல்லரசிடமும் அது ஆயுத உதவி பெற்றுக் கொள்ளாது.

பாகிஸ்தானை அல்லது அதன் நேச நாடுகளோ காஷ்மீர் பிரச்சினையைத் தீர்த்துவிட முடியாது.

பாகிஸ்தான் அரசாங்கத்தின் அனுமதியுடன் பாகிஸ்தானியர் காஷ்மீரில் ஆக்கிரமிப்புச் செய்தபோது அவர்களை அங்கிருந்து விரட்டும் வலிமை இந்தியாவுக்கு இருந்த போதிலும் யுத்தத்தை விரும்பாத காரணத்தால் சமாதானமாகத் தீர்வுகாணும் பொருட்டு இப்பிரச்சினையை இந்தியா ஐ. நா. வுக்குக் கொண்டு சென்றது. இந்தியாவுக்கு காஷ்மீரில் உள்ள உரிமையை அங்கீகரித்த ஐ. நா. ஸ்தாபனம் காஷ்மீரில் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதியிலிருந்து வெளியேற வேண்டும் என்று பாகிஸ்தானுக்கு உத்தரவிட்டது. ஐ. நா. தீர்மானத்துக்கு இணங்க பாகிஸ்தான் நடந்துகொள்ளவில்லை.

காஷ்மீர் பிரச்சினைக்கு முடிவு காண்பதற்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று கூறப்படுகிறது. காஷ்மீரில் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட அரசியல் நிர்ணய சபை அரசியல் சாசனத்தையும் அமைத்துக் கொண்டது. இதற்குப்பின் பொதுத் தேர்தலும் நடைபெற்று முடிந்து விட்டது. இனி என்ன வாக்கெடுப்பு?

இந்தியாவுக்கு எதிராகத் துவேஷப் பிரசாரம் செய்யவும் பாகிஸ்தானின் சொந்த விவகாரங்களிலிருந்தும் மக்களின் கவனத்தைத் திருப்பவுமே பாகிஸ்தான் அரசாங்கம் காஷ்மீர் பிரச்சினையைக் கிளறி வருகிறது.

இராணுவ அடிப்படையிலேயே பாகிஸ்தான் சிந்தனை செய்கிறது. ஆயுதங்களினால் எப்பிரச்சினையையும் தீர்த்து விடமுடியாது. ஆயுதங்களினால் நாட்டை அபிவிருத்தி செய்து விடவும் முடியாது. கடின உழைப்பாலும் கல்வித் திட்டத்தினாலும்தான் நாட்டை அபிவிருத்தி செய்யமுடியும் இதைத்தான் பாரதம் செய்து வருகிறது.

ஆசியாவில் அமெரிக்காவுக்கு உள்ள ஒரே நண்பன் பாகிஸ்தான் என்று ஜனாதிபதி அயூப் கான் அமெரிக்காவில் கூறினார். ஆனால் அமெரிக்கா தனக்குப் போதிய அளவு உதவி தரா விட்டால் சீனாவிடம் உதவி கேட்கப்போவதாகவும் அவரே கூறியுள்ளார். இது என்ன நட்பு?

கோவா பற்றி பிரதமர் நேரு குறிப்பிடுகையில் கோவா இந்தியாவின் ஒரு பகுதியென்றும் விரைவில் கோவா இந்தியாவுடன் இணைந்துவிடுமென்றும் அவர் தெரிவித்தார். "அங்கோலாவிலும் மொசாம்பிக்கிலும் போர்ச்சுக்கீஸியர் நடந்து கொள்ளும் முறை உலகில் போர்ச்சுக்கலின மதிப்பைச் சீர்குலைத்துள்ளது. இங்கிலேயில் போர்ச்சுகீஸியர் செய்வது சரி என்று பாகிஸ்தானும் கூறுவதுதான் வியப்பாக இருக்கிறது" என்று நேரு கூறினர்.

தென்ரொடீஷியாவில் ராணுவம் ரோந்து

லண்டன், ஜூலை 20

தென் ரொடீஷியாவில் ஒழுங்கையும் நிலைநாடுறதற்காக பொலிஸாரும் இராணுவத்தினரும் வீதிகளில் ரோந்து புரிவதற்காக அழைக்கப்பட்டுள்ளனர்.

தென்ரொடீஷியாவின் புதிய அரசியல் திட்டத்தை அங்கீகரிக்கக் கோரும் வாக்கெடுப்பு அடுத்த புதன் கிழமை நடைபெறுவதையொட்டி ஆபிரிக்க தேசீய வாதிகள் குழப்பம் ஏற்படுத்தக் கூடுமென்றும் மற்றும் பல திட்டங்கள் பற்றியும் அரசாங்கத்துக்குத் தகவல் கிடைத்ததாகவும் இதைத் தொடர்ந்தே நாட்டில் அமைதியை நிலைநாட்ட அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதென்று அறிவிக்கப்பட்டது.

திரு பவல்ஸ் இந்தியா செல்வார்

வாஷிங்டன், ஜூலை 20

அமெரிக்க உதவி ராஜாங்க மந்திரி திரு. செஸ்டர் பவல்ஸ் அடுத்தமாத ஆரத்தில் நைஜீரியா, சைப்பிரஸ், இந்தியா ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்வார். இதன் பின்னர் அமெரிக்க நாடுகளுக்கும் அவர் செல்வார்.

திரு. செஸ்டர் பவல்சுக்கும் தமக்கும் அபிப்பிராய பேதம் ஏற்பட்டுள்ளதாக வெளிவந்த செய்திகளை ஜனாதிபதி கென்னடி மறுத்துள்ளார். திரு. பவல்ஸ் மீது தமக்கு பூரண நம்பிக்கை உண்டென்றும் அவர் தொடர்ந்து தமது பதவியிலிருந்து வருவாரென்றும் திரு. கென்னடி நிருபர்கள் மகாநாட்டில் தெரிவித்தார். திரு. பவல்ஸ் தமது பதவியிலிருந்து ராஜினாமாச் செய்யப் போவதாகக் கூறியதுமில்லை ராஜினாமாச் செய்யும்படிதான் கேட்டதுமில்லை என்று திரு. கென்னடி தெரிவித்தார்.

லண்டன், ஜூலை 20

லண்டனிலுள்ள இந்திய ஸ்தானிகர் திருமதி. விஜயலட்சுமி பண்டிட் பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹரோல்ட் மாக்மிலனை நேற்றுச் சந்தித்துப் பேசினர்.

மத்திய அமெரிக்காவில்

எல்சல்வடோரின்புரட்சி திட்டம்நசுக்கப்பட்டது

மாஸ்கோவில் உருவான சதியாம்

நியுயோர்க், ஜூலை 20

மத்திய அமெரிக்காவிலுள்ள எல்சல் வடோர் ராஜ்யத்தில் அரசாங்கத்தைக் கவிழ்க்கச் செய்த சதித்திட்டம் முளையிலேயே நசுக்கப்பட்டுவிட்டதாக எல்சல்வடோர் அரசாங்கம் அறிவித்தது.

கியுபாவில் பிடல்காஸ்ட்ரோ புரட்சி நடத்தி வெற்றிபெற்ற தினமான ஜூலை 26-ந் திகதி எல்சல்வடோரின் அரசாங்கத்தைக் கவிழ்த்து ஆட்சியைக் கைப்பற்ற கம்யூனிஸ்ட்கள் சதி செய்ததாகவும் ரேடியோ நிலையத்தைக்கைப்பற்றுதல், தண்ணீர் விநியோகம், தந்தி, டெலிபோன் சேவையைத் தடை செய்தல், போக்குவரத்துச் சேவையை நிறுத்துதல், வேலை நிறுத்தம் செய்தல் ஆகியவைகளுடன், கொலைத்திட்டங்களையும் கம்யூனிஸ்ட்கள் தயாரித்திருந்தன என்று அரசாங்க அறிக்கை தெரிவித்தது. அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கான திட்டங்கள் மாஸ்கோவில் உருவாக்கப்பட்டவை என்று அரசாங்க அறிக்கை தெரிவித்தது.

சதித் திட்டம் சம்பந்தமாக நாட்டின் பந்தோபஸ்தை முன்னிட்டு கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த பலர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் இவர்களில் மூவர் சட்டக் கல்லூரி மாணவர் என்றும் அறிவிக்கப்பட்டது.

பொலிஸாரும், துருப்புக்களும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

வானவெளிப் பயணம் மீண்டும் ஒத்திவைப்பு

புளோரிடா, ஜூலை 20

வானவெளிக்கு இரண்டாவது மனிதனை அனுப்புவதற்கு அமெரிக்கா செய்து வரும் முயற்சி, கால நிலை காரணமாக மீண்டும் வெள்ளிக்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. நேற்று வானவெளிக்குச் செல்லவிருந்த இரண்டாவது மனிதன் நான்கு மணி நேரம் 'ராக்கெட்டுடன்' பொருத்தப்பட்ட கிரகத்தில் காத்திருந்தார்.

---

300 தொழில் பேட்டைகள்

ஹைதராபாத், ஜூலை 20

இந்தியாவின் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் நாடுமுழுவதிலும் 300 தொழில் பேட்டைகள் நிறுவப்படும் என்று இந்திய மத்திய அரசாங்க மந்திரி திரு. கே. எல். ரெட்டி இங்கு அறிவித்தார்.

---

37 வருட ஆசிரிய சேவை

நயினாதீவு, புதன்

"எப்பணியும் இறைபணியாக மதித்து வாழ்பவன் தன் வாழ்க்கையில் வெற்றி காணுகிறான். அவன் மனச்சஞ்சல மற்று திடபுத்தியுடன் தான் மேற்கொண்ட பணியைத் திறம்பட செய்துமுடிக்கும் ஆற்றல் பெறுகிறான். ஆசிரியத்தொழில் புரிவோர் யாவரும் கடவுள் பக்தியுடையவர்களாய் வாழ்தல் மாணவருக்கு முன்மாதிரியாயமையும். மாணவர் நல் வாழ்வில் அக்கறையுடைய ஆசிரியன் தன் பணியைப் புரிவதற்கு ஆற்றலுடையவனாகவும் திகழ்வான்" என்று முப்பத்தேழு வருடகாலம் தலைமை ஆசிரியராகக் கடமையாற்றி இளைப்பாறிய திரு ச. நா. கந்தையா நயினாதீவு ஸ்ரீ நாக பூஷணி வித்தியாசாலை ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் தமக்களிக்கப்பட்ட பிரிவுபசார கூட்டத்தில் பேசுகையிற் கூறினர்.

கூட்டத்துக்குப் பிரதமஉதவி ஆசிரியர் திரு. செ. ஐயாத்துரை தலைமை வகித்தார். பிரிவுபசாரப்பத்திரம் வாசித்தளிக்கப்பட்டு அன்பளிப்புக்களும் வழங்கப்பட்டன. திரு. கந்தையாவின் அரியசேவையைப் பாராட்டி ஆசிரியர்கள் பலர் பேசினர்.

ரஷிய-பிரஞ்சு துருப்புக்கள் கைகலப்பு

பிரஞ்சு மத்திரிசபை அவசர ஆலோசனை

பாரிஸ், ஜூலை 20

நேற்று டூனிசியாவில் டூனிஸ் துருப்புகளுக்கும் பிரஞ்சு கடற்படைத் தளத்தைச் சேர்ந்த துருப்புக்களுக்குமிடையில் கைகலப்புச் சம்பந்தமாக பிரஞ்சு பிரதமர் டெப்ரே மந்திரி சபையின் அவசரக் கூட்டத்தைக் கூட்டி விவாதித்தார்.

டூனிஷியாவிலுள்ள பிஸர்ட்டா கடற்படைத் தளத்திலுள்ள பிரஞ்சுப் படையினரை திருப்பி அழைத்துக் கொள்ளும்படி டூனிஷியா அதிபர் ஜெனரல் போகிபா பிரஞ்சு ஜனாதிபதியைக் கேட்டுக் கொண்டதற்கிணங்க படையினரைத் திருப்பி அழைக்காததால் அங்கிருந்து வெளியேற்றும் நடவடிக்கையாக பிஸர்ட்டா தளத்தில் உள்ள பிரஞ்சுத் துருப்பினர் வெளியே நடமாட முடியாதபடியும் உணவு முதலிய பொருட்கள் அங்கு கொண்டு செல்ல முடியாதபடியும் டூனிஷிய துருப்புக்கள் சாலைகளை அடைத்தனர்.

சாலை அடைக்கப்பட்டதைத் தொடர்ந்து இரு துருப்பினருக்குமிடையில் கைகலப்பு ஏறபட்டதாக அறிவிக்கப்பட்டது.

இக்கைகலப்பில் 50 பேர் கொல்லப்பட்டதாகவும் காயமடைந்ததாகவும் அறிவிக்கப்பட்டது.

நேற்று பிஸர்ட்டா தளத்தில் பிரஞ்சு பாரசூட் துருப்புக்களை பிரஞ்சு விமானங்கள் இறக்கிக் கொண்டிருந்ததாகவும் டூனிஷிய நிலையங்களைத் தாக்கியதாகவும் அப்ஸாருது டூனிஷியப் பிரங்கிப் படையினர் பிரஞ்சு விமானங்களைச் சுட்டதாகக் கூறப்பட்டது.

இன்று காலையும் பிஸர்ட்டா தளத்துக்கு தெற்கே ஒருஇடத்தில் இரு பகுதித் துருப்புக்களும் துப்பாக்கிப் பிரயோகம் செய்துகொண்டதாகத் அறிவிக்கப்பட்டது.

"அணுகுண்டு பரீட்சைகளை நிறுத்தவேண்டும்"

நியூயோர்க், ஜூலை 20

அணு ஆயுத பரீட்சைகளை நிறுத்திவைக்கக்கோரும் பிரேரணையொன்றை ஐ. நா. சபையில் விவாதத்துக்குக் கொண்டு வருவதற்கு இந்தியா முன்வந்துள்ளது. அணுக்குண்டுப் பரீட்சைகளை நிறுத்திவைக்கக் கோரும் பிரேரணை யை இந்தியப் பிரதிநிதி திரு. ஸி. எஸ். ஜா கொண்டுவருவார்.

விமான விபத்தில் 66 பேர் பலி

புவனர்ஸ் எயர்ஸ், ஜூலை 20

ஆர்ஜென்டைன 'எயர் லின்ஸ்' பிரயாணிகள் விமானமொன்று புவனர்ஸ் எயர்ஸ் விமான நிலையத்திலிருந்து புறப்பட்ட சமயம் தீப்பிடித்து நொறுங்கி விபத்துக்குள்ளானது. விமானத்திலிருந்த 60 பிரயாணிகளும் விமானிகள், சிப்பந்திகள் ஆறு பேரும் மாண்டனர். ஒருவர் கூட உயிர் தப்பவில்லையென்று அறிவிக்கப்பட்டது.

ஷோம்பே-மோபுத்து ஒப்பந்தம்

எலிஸபெத்வில்லி, ஜூலை 20

கடாங்கா அதிபர் ஷோம்பேயும் காங்கோ மத்திய அரசாங்க இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் மோபுத்துவும் இராணுவ ஒப்பந்தமொன்று செய்துகொண்டிருப்பதாக கடாங்கா அரசாங்க அதிகாரி யொருவர் நேற்று எலிஸபெத்வில்லியில் மதரிவித்தார்.

ஒப்பந்தத்தின் விபரம் எதுவும் வெளியிடப்படவில்லை. ஆனால் கடாங்கா இராணுவத்தை லியப்போல்டவில்லி இராணுவத்துடன் ஜெனரல் மோபுத்துவின் தலைமையின் கீழ் இணைப்பதற்கு இந்த ஒப்பந்தம் அதிகாரமளிப்பதாகக் கூறப்படுகிறது.

மேற்குநாடுகளின் வெளிவிவகாரமந்திரிகள் பாரிசில் கூடுவர்

வாஷிங்டன், ஜூலை 20

அமெரிக்க, பிரஞ்சு, பிரிட்டிஷ் வெளிவிவகார மந்திரிகள் அடுத்த மாதம் ஐந்தாந் திகதி பாரிசில் சந்தித்து பேர்லின், ஜேர்மன் பிரச்சினைகள் பற்றி ஆராய்வர். மூன்று தினங்கள் நடைபெறவிருக்கும் இம் மகாநாட்டின் பின், அத்திலாந்திக் நேச நாடுகளின் 15 அங்கத்தவர்களை அமெரிக்க ராஜாங்க மந்திரி திரு. டீன்றஸ்க் சந்தித்துப் பேசுவார்.

மணிவாக்கு

'உள்ளத்தை இறைவனுக்கே உகந்தளிப்பவர்களுக்குத் துன்பமில்லை. ஏனென்றால் அவர்கள் தீங்கு ஒன்றும் செய்வதில்லை'.

ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு ஆடி மீ 6உ (21-7-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone: 389

பிரதேச சபைகள்

இலங்கையிலேயுள்ள கச்சேரி முறையை ஒழித்துவிட்டு அவற்றுக்குப் பதில் பிரதேச சபைகளை அமைக்க அரசாங்கம், அடுத்த வருட திட்டத்தில் அடையாள மான்யம் ஒதுக்கியிருப்பதாக ஒரு செய்தி தெரிவிக்கின்றது. இது வரவேற்கத்தக்கதாவதுடன் அரசியல் முட்டுக்கட்டை தீரவும் முதற்படியாக அமையக் கூடும்.

பிரதேச சபைகளை அமைக்க வேண்டுமென்ற யோசனை புதிதன்று. ஏற்கெனவே பல ஆண்டுகளுக்கு முன் சொக்ஸி கமிஷன் இதைக் கூறியது. காலஞ் சென்ற பிரதமர் பண்டாரநாயக்காவும் இலங்கையில் ஊறுத்துப்போன கச்சேரி முறையை நீக்கிவிட்டு, பிரதேச சபைகளை அமைக்க வேண்டுமென்று பன் முறை கூறியுள்ளார். தமிழரசுக் கட்சித் தலைவரான திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தத்திலும், இச் சபைகளை அமைப்பதென்றும் ஒப்புக்கொண்டிருந்தார். ஆனால் துரதிருஷ்டவசமாக, இதற்குப் பல தடைகள் ஏற்பட்டன. இச் சபைகள் முன்னரே அமைக்கப்பட்டிருப்பின், இங்கு அரசியல் நிலைமை இவ்வளவு சிக்கலாகியுமிருந்திராது.

இது பற்றி ஒரு திட்டத்தை அரசாங்கம் சில காலத்துக்கு முன் தயாரித்துள்ளதாம். இதன்படி, அரசாங்க அதிபர்களிடமுள்ள மாகாண நிர்வாகத்தில் பெரும் பகுதி இச் சபைகளுக்கு மாற்றப்படுமென்றும், பிரதேச அபிவிருத்தி வேலைகள் பலவும் இச் சபையிடம் ஒப்புவிக்கப்படுமென்றும் தெரிகிறது. இப்பிரதேச சபை அமைப்பைப்பற்றிய விவரங்கள் இன்னும் வெளியிடப்படவில்லை ஆனால் இச்சபைகளுக்குத் தேர்தல் மூலம் பிரதிநிதிகளை மக்கள் தெரிவு செய்வார்களென்றும், அரசாங்க அதிபர்கள் ஆங்காங்கே இப்பிரதேச சபைகளின் காரியதரிசிகளாக இருந்து கடமையாற்றுவரென்றும் சொல்லப்படுகின்றது.

இப் பிரதேச சபைகளுக்கு விரிவான உரிமைகளும் அதிகாரமும் அளிக்கப்படின், இந் நாட்டில் ஜனநாயகம் அதிகசீராகவும் வெற்றியாகவும் நடைபெற உதவக்கூடும். ஆங்காங்கேயுள்ள மக்கள், தங்கள் பிரதேச நிர்வாகத்தைத் தாங்களே பொறுட்பேற்று நடத்திக் கொள்வது பிரிட்டன் முதலிய ஜனநாயக நாடுகளில் நடந்து வரும் முறையாகும். பொலிஸ், கல்வி, சுகாதாரம், விவசாயம் முதலிய பொறுப்புகளும் வெகுவாக இவ்வித பிரதேசசபை அல்லது 'கவுண்டி கவுன்ஸில்' களுக்கே பிரிட்டனில் அளிக்கப்பட்டு வெற்றிகரமாக நடந்து வருகின்றது. அதே முறையில் இங்கும், பல நிர்வாகப்பொறுப்புகளையும் கூடுமானவரை அவ்வப்பகுதிகளிலுள்ள மக்களுக்குப் பிரித்துக் கொடுத்துவிட்டு தலைமை அரசாங்கம், பாதுகாப்பு, வெளிவிவகாரம், நிதி முதலிய விஷயங்களையும், மேற்பார்வை பொறுப்புகளையும் கவனித்துக்கொள்ளலாம். அப்படிச் செய்வதால், நாட்டின் நிர்வாகப்பொறுப்பு பலரிடமும் ஆங்காங்கே பிரித்துக்கொடுக்கப்படுவதுடன், தலைமை அரசாங்கம் நாட்டின் மேலான அபிவிருத்தியில் பூரண கவனம் செலுத்தமுடியும்.

இன்பத் தமிழ் வளர்த்த சுந்தரமூர்த்தி சுவாமிகள்

— இ. சுந்தரராஜ சர்மா —

இறைவன் அடியெடுத்துக் கொடுக்கத் திருத்தொண்டத் தொகை பாடியருளி இன்பத் தமிழ் வளர்த்த சுந்தரமூர்த்தி சுவாமிகளின் குருபூசைத்தினம் இன்று.

பொய்யடிமையில்லாச் சங்கத்துச் சான்றோரான சுந்தரமூர்த்திசுவாமிகள் திருச்சரிதம் ஏனைய நாயன்மார்களின் திருச்சரிதங்களைவிட இல்லறவாழ்வினை அடிப்படையாகக் கொண்டது.

இறைவனைக் குருவாகக் கருதியவர் மணிவாசகர், தந்தையெனப் போற்றியவர் திருஞானசம்பந்தர், மேலான பரம்பொருள் என வழிபட்டவர் அப்பர், நண்ணினர்க்கு நல்லனை எம்பிரானின் தோழராம் பேறுபெற்றவர் சுந்தரமூர்த்தி சுவாமிகள். இறைவனால்விவாக சமயத்தில் தடுத்தாட்கொள்ளப்பட்டு வன்றொண்டராக விளங்கிய சுவாமிகள், வீட்டுப்பேறடைய வேண்டுமெனில் எல்லா ஆசைகளையும் துறந்தவர்களாயிருத்தல் வேண்டுமென்பாரின் கருத்துக்களை விட இல் வாழ்க்கையிலிருந்து கொண்டே அ பேறு அடையலாம் என்பதனை உணர்த்தினர்.

தம்பிரான்றோழரான சுவாமிகள் இறைவன்பாற் கொண்ட அன்பு தலைசிறந்தது. இறைவன் திருவருள் கைகூடவே அவன் பெருமையினால் திருவாய் மலர்ந்தருளிய தேவாரங்கள் தமிழ் வளர்ச்சியிற் பெரும்பங்கு கொண்டுள்ளன.

இறைவனைத் தோழராகப் பெற்ற சுந்தரர் இறைவன் தாம் விரும்பியதனை உடன் அருள் செய்யாத போது, கடவுளைச் சிறிது வெறுப்பது போலவும் அன்பு செய்தலை விரும்புவது போலவும் அவர் பாடியருளிய தேவாரங்கள் சில காணப்படுகின்றன. இறைவனோடு ஊடுதல் சுந்தரர்க்கு இயல்பு போலும். "ஊடினலினி யாவதொன்றுண்டே ஒற்றியூரரெனும் ஊருறைவானே" என்ற அவரது வாக்கும் சிந்திக்கப்பாலது.

திருப்பாச்சிலாச்சிரமத்து இறைவனை வழிபட்டு பொருளை விரும்பினின்றார் அதனை இறைவன் அருளாதொழியச் சுந்தரர் தோழமையுறவினால் முறையிடுவது போல அருளிய பாடல்களில் ஒன்று வருமாறு:-

"அன்னையே என்னேன்
அத்தனே என்னேன்
அடிகளே அமையு மென்றிருந்தேன்
என்னையும் ஒருவன்
உளன் என்று கருதி
இறை இறை திருவருள் காட்டாய்
அன்னமாம் பொய்கை
சூழ்தரு பாச்சி
லாச்சிராமத்துறை அடிகள்
பின்னையே அடியார்க்கருள்
செய்வதாகில்
இரவலாதில்லையோ பிரானார்".

அன்னையே என்னேன் அத்தனே யென்னேன் என்ற சுந்தரரின் திருவாக்குத் தொடரில் அவர் இறைவனைத் தோழர் என நேயம் பூண்டது தெளிவாகிறது.

சுந்தரரை ஆளுகின்ற இறைவன் குடிகொண்ட இடம் திருக்கேதீச்சரம். தம்பிரான் தோழர் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் தேவாரங்களைப் படித்தால் பயன் மிகவுண்டு.

மூவரென விருவரென
முக்கணுடை மூர்த்தி
மாவின் கனி தூங்கு பொழில்
மாதோட்ட நன்னகரில்
பாவம் வினையறுப்பார்
பயில் பாலாவியின் கரைமேல்
தேவனெனை யாழ்வான்
றிருக்கேதீச் சரத்தானே"

என்று கேதீச்சரத்தானைப் பாடிய சுந்தரரின் திருப்பாதங்கள் ஈழநாட்டிலும் பட்டு இம்மண் புனிதமடைந்திருக்க வேண்டும். அழகான தமிழ் வளர்த்த சுந்தரர் புலவர்களுக்கு ஒரு நல்ல யோசனை கூறுகின்றார். "பொய்மையாளரைப் பாடாதீர், எந்தை புகலூர் பாடுமின்" என்றும், அப்படிப் பாடினால், "இம்மையே தரும் சோறும் கூறையும் எத்தலாம் இடர் கெடலுமாம், அம்மையே சிவலோக மாள்வதற்கு யாதும் ஐயுறவில்லையே" என்று இடித்துக் கூறுகின்றார்.

"நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லு நா நமச்சிவாயவே" என்று பாடி, சைவ மக்களுக்கு நல்ல வழிகாட்டிய சமயகுரவரான சுந்தரர் வளர்த்த தமிழ் சுந்தரமானது. பயனுள்ளது. பொருளுணர்ந்து அதைப்பாடி அதிலுள்ள கருத்துப்படி நடப்பவர்களுக்கு, அவருக்குக் கிடைத்தது போல் எல்லா இன்பங்களும் கிடைக்கக் காத்துள்ளன. வாழ்க சுந்தரர் தமிழ்!

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு மார்பு நோய் சிகிச்சை நிபுணர்

மாநகரசபைக்கு வரும் பிரேரணை

யாழ்ப்பாணம், வெள்ளி

பின்வரும் பிரேரணையை திரு. ஆ. துரைராசசிங்கம் யாழ்ப்பாணம் மாநகரசபையின் அடுத்த கூட்டத்தில் கொண்டு வருவதற்கு முன்னறிவித்தல் செய்துள்ளார்:-

"இருதயம், சுவாசப்பை ஆகியவைகளில் உள்ள மார்புடன் சம்பந்தப்பட்ட நோய்களுக்கு விசேஷ சிகிச்சைபெறச் செல்லும் நோயாளர்களைத் திருப்பி அனுப்பவேண்டிய இக்கட்டான நிலையில் யாழ்ப்பாண ஆஸ்பத்திரி வைத்திய அதிகாரிகள் இருப்பதாலும் இதனால் மார்பு நோயாளர் படும் அவஸ்தையைப் பற்றி மாநகரசபையும் மற்றும் பல பிரமுகர்களும் பல சந்தர்ப்பங்களில் அரசாங்கத்தின் கவனத்துக்கு கொண்டு வந்திருந்தும் அவற்றைப் பொருட்படுத்தாது மார்பு நோய் நிபுணர் கோஷ்டி ஒன்று யாழ்ப்பாணத்துக்கு அனுப்புவதைச் சுகாதார இலாகா இரண்டாம் முறையாகவும் ஒத்திப்போட்டுள்ளதானது பெரும் வேதனையளிப்பதாக உள்ளது. எனவே, இது விஷயத்தைப் புனராலோசனை செய்து உடனடியாக மார்பு நோய் சிகிச்சை நிபுணரொருவரை அனுப்ப வேண்டுமென்று கௌரவ சுகாதார அமைச்சரை இச்சபை கேட்டுக்கொள்ளுகிறது."

ஓவசியர்களுக்கு சம்பளம் இல்லை!

திருக்கோணமலை, வியாழன்

இங்குள்ள கல்வி இலாகாவைச் சேர்ந்த 9 கட்டிட ஓவசியர்களுக்குக் கடந்த மூன்று மாத காலமாகச் சம்பளம் கிடைக்கவில்லை. இவர்கள் மிகுந்த கஷ்டத்துக்கு உள்ளாகி பட்டினி கிடக்கும் தறுவாயில் இருக்கிறார்கள்.

மரங்களைக் கடத்த செய்த முயற்சி தோல்வி

முள்ளியவளை, புதன்

ரூ. 5000 பெறுமதியான 22 முதிரை மரங்களைக் கடத்திக் கொண்டு செல்லும் முயற்சி ஒன்றை, முல்லைத்தீவு வனபரிபாலகர் திரு. என். சிற்றம்பலமும் அவரது கோஷ்டியினரும் முறியடித்தனர்.

அரசாங்கத்துக்குச் சொந்தமான இம்மரங்களை, இரண்டு லொறிகளில் ஏற்றி, வைக்கோற் கற்றைகளாலும், தவிட்டு மூடைகளாலும் மூடிச்சென்றனராம்.

மாமடு என்னும் இடத்திலிருந்து துரத்திச்சென்ற வன பரிபாலன கோஷ்டி முறிகண்டிக்குக் கிட்ட, மரங்களைக் கைப்பற்றனர். இது சம்பந்தமாகக் கைது செய்யப்பட்ட இருவர் பிணையில் விடப்பட்டுள்ளனர்.

ஊர்காவற்றுறையில் உப தொழிற் கந்தோர்

ஊர்காவற்றுறை, புதன்

ஊர்காவற்றுறையில் தீவுப் பகுதி மக்களின் நலன் கருதி 'உப தொழிற்கந்தோர்' ஒன்றை அமைப்பதற்கு தொழில் அதிபர் அனுமதித்திருப்பதாகத் தெரியவருகிறது.

ஊர்காவற்றுறை பட்டின சங்கத் தலைவரின் பெருமுயற்சியால் ஆரம்பிக்கப்படவிருக்கும் உபதொழிற்கந்தோர் மேற்படி பட்டின சங்க மண்டபத்தில் திறக்கப்படுமென்றும் அறிவிக்கப்படுகிறது.

ரூ. 3000 பெறுமதியான நூல்கள்

முன்னாள் முகாமைக்காரர் அபகரித்ததாக முறையீடு

யாழ்ப்பாணம், வெள்ளி

வண்ணார்பண்ணை நாவலர் பாடசாலை நூல் நிலையத்துக்குச் சொந்தமான மூவாயிரம் ரூபாய் பெறுமதியான புத்தகங்களை முன்னாள் முகாமைக்காரரான திரு. வி. முத்துக்குமாரு அபகரித்துக் கொண்டு போய்விட்டதாக அப்பாடசாலை தலைமையாசிரியர் வித்தியாதரிசிக்கும் பொலிஸாருக்கும் முறைப்பாடு செய்துள்ளார் எனத் தெரிகிறது.

கடந்த சனிக்கிழமை குறிப்பிட்ட முகாமைக்காரர் தனது மனைவியுடனும் மக்கள் மூவருடனும் மோட்டார் வாகனமொன்றில் வந்து பூட்டப்பட்டிருந்த பாடசாலை மண்டபத்திலிருந்து அவற்றை எடுத்துச் சென்றதாகவும் அவ்வமயம் பண்டித வகுப்பு அங்கு நடைபெற்றுக் கொண்டிருந்ததாகவும் பாடசாலைப் பாதுகாவலர் தலைமையாசிரியருக்கு முறையிட்டிருந்தார் எனத் தெரிகிறது.

ஐயாறன் எழுதுவது

வெள்ளைக் கவுணுடுத்து, வெள்ளைப் பூட்ஸ் போட்டு, 'லெப்ட் ரைட்' 'லெப் ரைட்' என்று நூற்றுக்கணக்கான இளம் பெண்கள் இசைமுழங்க 'டக் டக்' என்று அணிவகுத்து நிமிர்ந்து சென்ற காட்சியை நேற்று மாலை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் கண்டேன்.

மகாகவிபாரதியார் பாடிய புதுமைப் பெண்கள் புதுயுகம் சமைக்க இங்கு வந்துவிட்டது போல் தோன்றியது. "நிமிர்ந்த நன்னடை நேர் கொண்ட பார்வையும், நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்" கொண்டு "மாற்றி வையம் புதுமையுறச் செய்து. மனிதர் தம்மை அமரர்களாக்கவே, ஆற்றல் கொண்ட பராசக்தி அன்னை, நல்லருளினால் ஒரு கன்னிகையாகியே, தேற்று உண்மைகள் கூறிட வந்திட்டாள், செல்வம் யாவினும் மேற் செல்வம் எய்தினோம்" என்று அவர் பாடிய அமரகவிதையே அங்கு என்கண்முன் கண்டேன்.

* * *

வடமாகாண 'கேர்ள்கயிட்ஸ்' என்ற சாரணப் பெண்கள் இங்கு வந்துள்ள அமெரிக்க பெண் சாரணர் கமிஷனரான மிஸஸ் மெடோஸை வரவேற்று நடனம், நாடகம் முதலிய ருசிருசியானகதம்ப நிகழ்ச்சிகளைக் கச்சிதமாக நடத்திக் காட்டினார்கள். இதைக் கண்ட அந்த அமெரிக்க வீரப் பெண்மணி உளம் பூரித்து, யாழ்ப்பாணத்தைப் பற்றிப் பெருமதிப்புக் கொண்டார். அவரைப்பார்த்தால் 25வயதுதான் மதிப்பிடலாம். ஆனால் அவருக்கு 25 வயதுள்ள மகன் இருக்கிறாராம்! என்றும் இளமையோடிருக்கும் ரகசியத்தை நம்பெண்களும் அவரிடம் கற்க வேண்டும்!

சமூகத்திலே சரிபாதியான பெண்கள், முன்வந்து, சமூகப் பொறுப்புக்களை ஏற்கத் தயாராகவுள்ளனரென்றும், நம் எதிர்காலம் மிக மேலாக இருக்கப்போகிறதென்றும் அன்றைய காட்சிகள் எனக்கு அறிவுறுத்தின.

* * *

வானவெளியிலே உலகம் சுற்றிய ரஷ்ய ககாரினுக்குப் பிரிட்டனிலே குதூகலமான வரவேற்புக் கிடைத்தது. புன்முறுவலால் அவர் பலர் மனதையும் கொள்ளை கொண்டார். ஒரு பிரிட்டிஷ் பெண் காத்திருந்து ககாரினை முத்தமிட்ட படத்தைக் கண்டேன். அந்த அளவுக்கு நம் பெண்கள் யாரும் முன்னேற வேண்டியதில்லை!

ககாரின் இனிவேறு சில நாடுகளுக்குச் செல்வதாகத் தெரிகிறது. இலங்கைக்கும் அவரை அழைக்க வேண்டும். அவர் நல்ல பிரசார சாதனமானதால் ரஷ்யாவும் இதற்கான ஒழுங்கு செய்யலாம்!

* * *

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியைப்பற்றி சில வாரங்களுக்கு முன் என்னிடம் புகார் கூறிய ஓர் அன்பர் வந்து, இப்போது அங்கு மிக நல்ல மாறுதல் ஏற்பட்டுவிட்டதாயும், அங்கு நல்ல ஒழுங்காக எல்லாம் கவனிக்கப்படுவதாயும், 'ஈழநாடு' பத்திரிகையில் எழுதியது நல்ல பலனளித்துள்ளதாயும் வாயாரப் பாராட்டி என்னை நேரில் சென்று பார்க்கச் சொன்னார். இதைக் கேட்க மிக மகிழ்ச்சியாக இருந்தது. ஆனால் கங்காணிமார்களில் சிலர்தான் இன்னும் திருந்த வேண்டியிருக்கிறதென்றார்.

* * *

ஊரடங்குச் சட்டத்தை அகற்ற வேண்டுமென்று இரண்டு நாட்களுக்குமுன் தான் இப்பத்தியிலே எழுதினேன். அதை விரைவில் நீக

(7ம் பக்கம் பார்க்க)

வட்டுக்கோட்டை கொலை வழக்கு

காரிலிருந்த கறைபடிந்த கல் கோர்ட்டில் சமர்ப்பிக்கப் படவில்லை

சாட்சி தம்பிப்பிள்ளை பிணையில் விடுதலை

யாழ்ப்பாணம், வெள்ளி

1960-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11-ந் திகதி வட்டுக் கோட்டைக் கிராமச் சங்கத் தலைவர் பி. எம். நடராஜா வைக் கொலை செய்ததாக வட்டுக்கோட்டையைச் சேர்ந்த சின்னத்தம்பி இரத்தினசபா பதிமீது குற்றஞ் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு வட பகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் டாக்டர் எச். டபிள்யு. தம்பையா கியு. ஸி. மூன்னிலையில் நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

முடிக்குரிய வழக்கறிஞர் திரு. பி. நகுலேஸ்வரன் விசாரணையை ஆரம்பித்து வைத்தார். திருவாளர்கள் ஆர். ஸிவநாதன், என். ஆர். விஜயநாதன் ஆகியோரின் அனுசரணையுடன் திரு. எஸ். நாகராஜாவுடன் திரு. என். சத்யேந்திரா எதிரியின் சார்பில் ஆஜராளர். திரு. வி. நடராசா எதிரியின் சார்பில் ஆஜராக ஏற்படுத்தப்பட்டிருந்தார்.

பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. எம். செல்வரத்தினம் சாட்சியமளிக்கையில் பின்வருமாறு கூறினர்:-

சம்பவம் நடைபெற்ற சமயத்தில் நான் சங்கானைப் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிக் கொண்டிருந்தேன். ஏப்ரல் மாதம் 14-ந் திகதி கொலைச் சம்பவம்பற்றி இரவு 11-15க்கு எனக்குத் தகவல் கிடைத்தது. இரவு 11-17க்கு பொலிஸ் நிலையத்திலிருந்து புறப்பட்டேன். பொலிஸ் நிலையத்துக்கு நான் சென்ற சமயம பொலிஸ்காரர் சிபேரா வாக்குமூலம் பதிவு செய்து கொண்டிருந்தார். அது திருநாவுக்கரசுவின் வாக்கு மூலம். நான் அங்கிருந்து புறப்படுவதற்கு முன் பஸ் கண்டக்டர்கள் சிலர் அங்கு வந்தார்கள். அவர்களில் தம்பிப்பிள்ளையும் ஒருவர்.

நீதியரசர்: அவர்கள் உமக்கு சில தகவல்களைத் தருவதற்கு வந்திருப்பதாக நீர் அறிந்தீர்?

சாட்சி: ஆம்.

நீதியரசர்: சில முக்கியமான தகவல்களைக் கொண்டு வந்திருந்தவர்களிடம் வாக்குமூலம் பதிவு செய்வது முக்கியமென்று நீர் கருதவில்லை?

சாட்சி: பாதை ஒரு காரினால் தடை செய்யப்பட்டிருந்ததால் புன்னாலை மார்க்கமாகதான் வர வேண்டியிருந்ததென்று தம்பிப்பிள்ளை சொன்னர். அவர் வேறு ஒன்றும் கூறவில்லை.

நீதியரசர்: நேற்று இங்கு தம்பிப்பிள்ளை சாட்சியமளித்த பொழுது கார் ஒன்று பாதையைத் தடைசெய்து கொண்டிருந்ததைக் கண்டதும் தான் இறங்கி அக்காருக்குச் சென்றதாகவும் அப்பொழுது எதிரி ஏதோ கூறியதாகவும் தெரிவித்தாரே!

சாட்சி: அது பொய்! தம்பிப்பிள்ளை அப்படிச் சொல்லியிருந்தால் அவரை அங்கு நிறுத்தி வைத்து அவரது வாக்குமூலத்தைப் பதிவு செய்யும்படி வேறு பொலிஸ்காரரிடம் சொல்லியிருப்பேன்.

இன்ஸ்பெக்டர் செல்வரத்தினம் தமது சாட்சியத்தில் மேலும் கூறியதாவது:

வேட்டைக் கத்தி காரில் இருந்தது

அந்தக் காரில் ஒரு வேட்டைக் கத்தியும் காரின் பின் ஆசனத்தின் பக்கத்தில் வெறும் சாராயப் போத்தலும் கிளாஸ் டம்ளரும் இருந்ததைக் கண்டேன். போத்தலில் சாராய வாடை வீசியது. அச் சம்பவத்தின் பின இரவில் பலத்த மழை பெய்தது. இரத்தக் கறை படிந்த ஒரு பெரிய கல்லு காரின்பின் ஆசனத்திலிருந்தது.

நீதியரசர்: இது அரசாங்க பரிசோதகருக்கு அனுப்பப்பட்டதா?

சாட்சி: ஆம்.

நீதியரசர்: எதிரியின் மீதோ இறந்தவரின் உடலிலோ கல்வீசிய காயம் எதுவும் இருந்ததா?

முடிக்குரிய வழக்கறிஞர்: நீதிமன்றத்தில் அந்தக் கல்லு சமர்ப்பிக்கப்படவில்லை.

சாட்சி: நான் அதைச் சமர்ப்பித்திருந்தேன்.

மு. வ.: கீழ்க்கோர்ட்டில் அது சமர்ப்பிக்கப்பட்டதா?

நீதியரசர்: கீழ்க் கோர்ட்டில் பிராசிக்கியூஷனுக்குப் பொறுப்பாக இருந்தவர் யார்?

சாட்சி: காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் சுப்ரின்டென்டன்ட்.

நீதியரசர்: சம்பவம் நடைபெற்ற இடத்தில் காணப்பட்ட பொருள்களை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்காமல் இருக்க முடியாது. இப்படிச் சமர்ம்பிக்கப்படாத வழக்கு இது ஒன்றுதானல்ல.

வேறொரு வழக்கில் மிக முக்கியமான ஒரு பொருளை கோர்ட்டில் சமர்ப்பிக்கப்பட்டிருக்காததை திரு. கணேசலிங்கம் எனது கவனத்திற்குக் கொண்டு வந்திருந்தார்.

இது போன்ற விஷயங்களில் முடிக்குரிய வழக்கறிஞர் அதே வழக்குகளை நிதவான் கோர்ட்டுக்குத் திருப்பி அனுப்பப்பட வேண்டும்."

குறுக்கு விசாரணையில் கேள்விகளுக்கு சாட்சி பதிலளிக்கையில் 1959-ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் பி. எம். நடராஜாவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில் அவரை நன்னடத்தைப பிணையில் விடுமாறு தான் கோரியிருந்ததாகத் தெரிவித்தார். நன்னடத்தைப் பிணையில் விடுதலை செய்யுமாறு தாம் செய்திருந்த மனுவை நான்கு மாதங்களின் பின் வாபஸ் பெற்றுக் கொண்டதாகவும் அப்பகுதியில் நடராசா செல்வாக்குள்ளவராக இருந்ததாகவும் ஒரு காடையராகவும் இருந்தாரென்றும் இன்ஸ்பெக்டர் செல்வரத்தினம் கூறினர்.

அடுத்து பொலிஸ்காரர் டபிள்யு. டபிள்யு. சிபேரா சாட்சியமளிக்கையில் ஒரு கட்டத்தில் நீதியரசர் குறுக்கிட்டு, "சுப்ரீம் கோர்ட்டில் விசாரணை செய்யப்படுவதற்காக இது போன்ற வழக்குகளில் வரிபிறுப்பாளரின் பணம் எவ்வளவு செலவாகிறதென்று உமக்குத் தெரியுமா? ஆனல் நான் உம்மைக் குறை கூறவில்லை. பொலிஸ் நிலையத்துக்குப் பொறுப்பான இன்ஸ்பெக்டர் செல்வரத்தினம் சரியான முறையில் விசாரணை செய்யவில்லை என்றுதான் கூறுகிறேன்" என்று கூறினர்

இவ்விஷயம்பற்றி பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலின் கவனத்துக்குக் கொண்டுவருமாறு முடிக்குரிய வழக்கறிஞரிடம் நீதியரசர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் பிஸ்கால் காவலில் வைக்கப்பட்ட சாட்சி ஆர். தம்பிப்பிள்ளை 500 ரூபாய் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

வழக்கு விசாரணை இன்றும் தொடர்ந்து நடைபெறும்.

வடமாகாண பெண்சாரணர் அணிவகுப்பு

வட்டுக்கோட்டையில்நடந்தசம்பவம்

யாழ்ப்பாணம், வெள்ளி

வடமாகாண பெண் சாரணர் அணி வகுப்பு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நேற்று மாலை விமரிசையாக நடைபெற்றது. அமெரிக்க பெண் சாரணர் இயக்க அதிகாரி மிஸஸ் மெடோஸ் விசேஷ விருந்தினராக வந்து அணி வகுப்பை பார்வையிட்டார்.

வடமாகாண பெண் சாரணக் கமிஷனர் ஸ்ரீமதி பாமர், மிஸஸ் மெடோஸை வரவேற்றுப் பேசுகையில், தூரத்திலுள்ள அமெரிக்காவிலிருந்து மிஸஸ் மெடோஸ் இங்கு விஜயஞ் செய்ததற்கு நன்றி தெவித்து, அவர் விஜயத்தால் இரு தேச பெண் சாரணர்களுக்கும் நெருங்கிய உறவும் நல்லெண்ணமும் பலப்பட்டுள்ளதாகக் கூறினர்.

மிஸஸ் மெடோஸ் பின்னர் பேசுகையில், பெண் சாரண இயக்கம் ஓர் உலக இயக்கமென்றும், இதில் சேர்ந்தவர் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர் போல்வரென்றும், யாழ்ப்பாணத்தின் அன்பான விருந்தோம்பலுக்குத் தாம் நன்றி தெரிவிப்பதாயும், அவர்களது அபிமானத்தை தாம் அமெரிக்க பெண் சாரணருக்குத் தெரிவிப்பதாயும் சொன்னர்.

வடமாகாண கல்வி அதிகாரி திரு. சேகமசேகரம் தமிழில் பேசுகையில், பெண் சாரண இயக்கத்தால் பெண்களின் குண நலன்கள் அபிவிருத்தியடையுமென்றும் இந்த இயக்கம் மேலும் வளரக் கல்வி இலாகா கூடுமான உதவி செயயுமென்றும் நட்பு நாடான அமெரிக்காவிலிருந்து விஜயம் செய்துள்ள மிஸஸ் மெடோஸுக்கு தமது நன்றியைத்தெரிவிப்பதாகவும் சொன்னர்.

பின்னர் நடந்த பல கலை நிகழ்ச்சிகளில் பண்டத்தரிப்பு, உடுப்பிட்டி, வேம்படி, விக்டோரியா, சுண்டிக்குளி, உடுவில், பரந்தன், யாழ்ப்பாணக் கல்லூரி, யாழ்ப்பாண இந்துக்கல்லூரி முதலிய கல்லூரிகளின் பெண் சாரணர்கள் கலந்து கொண்டனர்.

கொழும்பு, வியாழன்

கோட்டே பகுதியில் வசிக்கும் மக்களுக்கு விதிக்கப்பட்டிருக்கும் தண்ணீர் வரிக்கெதிராக மக்கள் ஐக்கியமுன்னணி தீவிர இயக்கத்தை ஆரம்பித்திருக்கிறது.

சிம்மாசனப் பிரசங்கம் கெனட்டில் நிறைவேறியது

கொழும்பு, வியாழன்

கவர்னர் ஜெனரலின் சிம்மாசனப்பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணை, இன்று செனட்சபையில் வாக்கெடுப்புக்கு விடப்படாமலேயே நிறை வேற்றப்பட்டது.

புத்தளம் சிமெந்து தொழிற்சாலை

புத்தளத்தில் 2-வது சிமெந்து தொழிற்சாலை அமைக்கப் படவிருப்பதை முன்னிட்டு அங்கு ரயில்பாதை புதுப்பிக்கப்படுவதுடன், விஸ்தரிக்கவும் படும் என அறிவிக்கப் படுகிறது.

கொலன்னாவையில் ஷெல் கம்பெனி உடைமைகள் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் மேற்கொண்டது

கொழும்பு, வியாழன்

கொலன்னாவையில் ஷெல் கம்பெனிக்குச் சொந்தமான நிலப்பரப்பு கெஸ்ட் உத்தரவு ஒன்றின்மூலம் இலங்கை பெட்ரோலியம் கார்ப்பரேஷனுக்கு ஒப்படைக்கப்பட்டதாக வர்த்தக மந்திரி திரு. டி. பி. இலங்கரத்ன ஜனப்பிரதிநிதிகள் சபையில் இன்று விடுத்த அறிக்கையில் கூறினர்.

இந்த உரிமை மாற்றத்திற்கு கார்ப்பரேஷன் அதிகாரிகளுடன் ஷெல்கம்பெனி அதிகாரியும் உடனிருந்து, வேலைகளை இலகுவாக்கியதாயும் மந்திரி கூறினர். இப்போது அங்குள்ள நிலத்திற்கும், இதரஉடைமைகளுக்கும் மதிப்பீடு செய்யப்பட்டிருப்பதாயும், உரிமைமாற்றம் பற்றி இரண்டொரு நாளில் இடைக்கால ஒழுங்கு செய்யப்படுமென்றும் மந்திரி அறிவித்தார்.

பி. ஓ. ஏ. ஸி. வேலைநிறுத்தம் முடிந்தது

லண்டன், ஜூலை 20

கடந்த 6 தினங்களாக லண்டனில் டைபெற்றுவந்த பி. ஓ. ஏ. ஸி. விமான என்ஜினியர்களின் வேலைநிறுத்தம் முடிவடைந்தது. வெளிநாட்டு விமானசேவை இதனால் பாதிக்கப்பட்டிருந்தது. இவ் வேலைநிறுத்தத்தினால் 55 லட்சம் பவுண் நஷ்டம் ஏற்பட்டது. 600 என்ஜினியர்கள் இவ் வேலைநிறுத்தத்தில் கலந்து கொண்டனர்.

பிரஜாஉரிமை பகுதி பாதுகாப்பு இலாகாவிலிருந்து நீக்கப்பட்டது

கொழும்பு, வியாழன்

அரசாங்கம் இப்போது மேற்கொண்டிருக்கும் சிக்கன நடவடிக்கை காரணமாகபாதுகாப்பு வெளிவிவகார அமைச்சிலுள்ள பிரஜா உரிமைப்பகுதி நீக்கப்பட்டுள்ளது. இதில் வேலைபார்த்து வந்தவர்கள் பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சிலுள்ள மற்ற இலாகாக்களுக்கும் பிரிவுகளுக்கும்மாற்றப்பட்டிருக்கிறார்கள்.

பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. என். கியூ டயஸ், திரு. எச். ஏ. ஜயவீரா, திரு பி. டபிள்யு. சொய்ஸா ஆகியோர் அடங்கிய கமிட்டியின் சிபார்சின் பேரில்தான் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

பிரஜா உரிமைப் பகுதியை பாதுகாப்பு வெளி விவகார அமைச்சின் ஆலோசனையுடன் குடியேற்ற, வெளியேற்ற இலாகாவனித்து வருமென்று தெரியவருகிறது.

பிரஜாஉரிமைப் பகுதிக்குப் பொறுப்பாக இருந்த உதவிக் காரியதரிசி திரு செனிவிரத்ன பாதுகாப்புப் பிரிவின் தலைவராகத் தொடர்ந்து இருந்து வருகிறார்.

மலைநாட்டு நடனங்கள்

கொழும்பு, வியாழன்

மலைநாட்டு நடனத் தோற்றங்கள் பற்றிய குறிப்புப் புத்தகம் ஒன்றை கலாபவனம் வெளியிடவிருக்கிறது. இது சம்பந்தமாக போட்டி ஒன்றை நடத்தவும் அது ஒழுங்கு செய்திருக்கிறது.

கண்டியில் கூட்டுறவு பொருட்காட்சி

கொழும்பு, வியாழன்

இலங்கை கூட்டுறவு சம்மேளனமும், கூட்டுறவு அபிவிருத்திப்பகுதியும் கண்டியில் பொருட்காட்சி ஒன்றை நடத்தவிருக்கின்றன. கூட்டுறவுநிலையங்களின்பொருட்கள் காட்சிக்கு வைக்கப்படும். இப் பொருட் காட்சியில் வெளிநாடுகளும் பங்கு பற்றும். நாட்டிய இசைக் கச்சேரிகளும் இதில் இடம் பெறும்.

சாவிலும் சமத்துவம்! 'இடுகாடுகளை தேசியமயமாக்குக'

சுதந்திரக் கட்சி கிளை தீர்மானம்

வத்தளை, வியாழன்

இலங்கையிலுள்ள எல்லா இடுகாடுகளையும் தேசியமயமாக்க உடனடி நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானமொன்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வத்தளைக்கிளையின் பிரத்தியேகக் கூட்டத்தில் ஏகமனதாகநிறைவேற்றப்பட்டது.

"இப்பொழுது பணம் சம்பாதிப்பதற்காக இடுகாடுகள் பயன் படுத்தப் படுகின்றன. இன, மத வேறுபாடின்றி இலங்கையில் உள்ள சகலருக்கும் சமசந்தர்ப்பம் அளிப்பதற்கு இடுகாடுகளைத் தேசியமயமாக்குவது அவசியம்" என்று பிரேரணையைச் சமர்ப்பித்துப்பேசும் போது வத்தளைக் கிளைக் காரியதரிசி திரு. டி. எஸ். சோமபாலா குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசியதாவது:-

"ஒரு சோஷலிஸ நாட்டில் சாவிலும் எல்லோருக்கும்சமத்துவம்இருக்கவேண்டும். ஆனல் சாவிலும் சமத்துவம் கிடைப்பது ஏழைகளுக்குக் கஷ்டமாக இருக்கிறது.

"பிற நாடுகளில் இடுகாடுகள் அரசாங்கச்சொத்தாக இருந்து வருகின்றன. எந்தவித எதிர்ப்பு வந்தாலும் பயமும், தயக்கமும் இன்றி அரசாங்கம் இடுகாடுகளைத்தேசியமயமாக்க வேண்டும்"

"ஏழைகளின் நன்மைக்காகத் தான் இடுகாடுகளைத் தேசியமயமாக்கும் திட்டத்தை வத்தளைக் கிளை கொண்டுவருகிறது" என்று பிரேரணையை ஆதரித்துப்பேசிய திரு. ரேமெண்ட் பெரேரா கூறினர்.

ஐயாறன்

(4ம்-பக்கத் தொடர்ச்சி)

கப் போவதாக பிரதமர் செனட் சபையில் குறிப்பிட்டிருப்பதைக் கேட்க, இங்கு பலருக்கும் ஒருவித ஆறுதல். காலமும் மாறும்தானே!

ஒரே பாடசாலையில் மூன்று

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யாடும் பிள்ளைகள் வகுப்புவாத உணர்ச்சி குறைந்தவர்களாய் இருந்திருப்பது அனுபவத்தில் கண்ட உண்மை என்றும் தமது மகஜரில் அவர் கூறியிருக்கிறார்.

மங்கையர் உலகம்

சமூக சேவையும் பெண்களுக்கு அவசியம் என்கிறார் செல்வி மத்தாய்

எங்களிடையே இருந்து பணியாற்றுவோரைப் பார்க்க வேண்டும். அவர்களின் கருத்துக்களை அறியவேண்டுமென்ற எண்ணம் பலகாலமாக இருந்துவந்தது. இன்று எத்தனையோ பெண்மணிகள் கல்லூரி அதிபர்களாகத் திறமையுடன் பணியாற்றி நல்ல சமூகத் தொண்டுகளைச் செய்துவருகின்றனர். அவர்களின் கருத்துக்கள் சிலவற்றை அறிந்துகொள்வதுநல்லதல்லவா

பெண்குலத்தின் மேம்பாட்டுக்காகத் தமது வாழ்நாள் முழுவதும் உழைத்துவரும் செல்வி எஸ். டி. மத்தாய் சுமார் டிக்குளி மகளிர் கல்லூரியில் பல ஆண்டுகள் பணியாற்றி அதன் அதிபராக இப்போது விளங்கிவருகின்றார். தென்னித்தியாவைச்சேர்ந்த இவரின் சேவை இந்நாட்டுக்குக் கிடைத்திருப்பது இந்நாட்டு மக்களின் அருதிஷ்டமேயாகும்

செல்வி எஸ். டி. மத்தாய்

பரந்த நோக்கமும், நற்பண்பும் வாய்ந்த செல்வி. மத்தாய் அவர்களை 'ஈழநாடு' மங்கையர் உலகம் பேட்டி கண்டபோது அவர் இன்முகத்துடன் அளித்த கருத்துக்களை இனிப்படியுங்கள்

கேள்வி:- ஆண், பெண் இருபாலாரும் சேர்ந்து கல்வி பயிலும் முறையை நீங்கள் விரும்புகிறீர்களா?

பதில்:- ஆம், ஆரம்ப வகுப்புகளிலும், சிரேஷ்ட தராதரப் பத்திர வகுப்புக்கு மேல் கல்வி பயில்வோருக்கும் இம்முறைக் கல்வி அதிக பயனளிக்கும். பார்க்கும் பொருள்கள் யாவற்றையும் ஆர்வத்தோடு ஆராயும் குழந்தைகளின் உள்ளங்கள் வேறுபடையும். ஆண், பெண் என்ற வேற்றுமை வெறுப்பின்றி ஒன்றுசேர்ந்து கற்க நல்ல வாய்ப்பளிக்கிறது. இதேபோல் உயர் கல்வி வகுப்களிலும் ஆண், பெண் என்று பிரித்துக் கல்வி பயிற்றுதல், அறிவு வளர்ச்சிக்கும் ஆராய்ச்சித் திறனுக்கும் பெருந்தடை விதிக்கிறது.

கே:- அப்படியாயின் மத்திய வகுப்புக்களில் (5-ம், 6-ம் வகுப்பு—சிரேஷ்ட வகுப்பு) தனித்தனியே கல்வி பயிற்றுவது அவசியம் என்று கூறுகிறீர்கள். அப்படித்தானே!

ப:- மத்திய வகுப்புக்களில் கூட்டுக் கல்வியளிப்பது நன்றல்ல. ஏனெனில் இக்காலத்திற் பெறும் கல்வியறிவு மாணவரின் பிற்கால வாழ்வை பெருமளவில் நிர்ணயிக்கிறது. விசேஷமாகப் பெண்களுக்கு இக்காலம் மிகவும் முக்கியம் வாய்ந்தது. அவர்களுக்குப் பிரத்தியேகமான சில பாடங்கள் கட்டாயமாகக் கற்பிக்க வேண்டும். உதாரணமாக தையல், நாட்டியம், வீட்டுப்பணிபோன்றவற்றை இணைந்த கல்விஸ்தாபனங்களிலே விசேஷ கவனமெடுத்துக் கற்பிக்கப் பூரண வாய்ப்புக் கிட்டாது. அன்றியும் இளம் மாணவிகள் தத்தமது விருப்புக்கள் ஈடுபாடுகளுக்கேற்பத் தனியே கற்க வருபவர்கள் என எண்ணுகிறேன்.

கே:- பாடசாலை மாணவிகள் 'யூனிபோம்' அணிவது கீழைத்தேசப் பண்பாட்டுக்கு ஒவ்வாது என்று சிலர் கூறுகிறார்களே இதைப்பற்றி தங்கள் அபிப்பிராயம் என்ன?

ப:- அப்படியொன்றும் எனக்குத் தோன்றவில்லையே. கீழ்நாடு என்ற வேற்றுமை மறையவேண்டும். எது நமக்கு உகந்ததோ அதனை ஏற்றுக் கொள்ளுவதிலே தான் சிறப்பமைந்திருக்கிறது. பிள்ளைகளின் சௌகரியங்களுக்கும், சிக்கனவாழ்வுக்கும், நம் நாட்டுச் சுவாத்திய நிலைக்கும் 'யூனிபோம்' தான் சிறந்ததென நான் எண்ணுகின்றேன். மாணவிகளே இவ்வுடையில் வெகு நேர்த்தியாகத தோன்றுகிறார்களே! வேறெந்த நாட்டிலும் இல்லாத பெருமை அளிக்கும் இந்த நாகரீக உடையைக் கண்டிப்பது வேடிக்கைதான்.

கே:- மணமான பெண்கள் கல்வி பயிற்றுவதைப்பற்றி என்ன கருதுகிறீர்கள்? இவர்களுக்கேற்படும் சிரமத்தைத் தீர்க்க வழிகள் உண்டா?

ப:- இவர்களுக்குச் சிரமம் இருக்கத்தான் செய்கிறது. சிரமங்கள் குறைவதற்கு மார்க்கமும் உண்டு. மணமான பெண்களுக்கு முதற் சில வருடங்களுக்குத்தான் பெரும்பாலும் சிறு குழந்தைகளை வீட்டிலேயே இருந்து கவனிக்க வேண்டியிருக்கிறது. இக்காலங்களில் வெளியே சென்று உத்தியோகம் பார்த்தால் வீட்டிலே குழந்தைகளை ஒழுங்காகப் பராமரிக்க முடிவதில்லை. வெளியிலும் கடமையை முறையாகச் செய்ய வசதியாக இருப்பதில்லை. பிள்ளைகள் சற்று வளர்ந்தவுடன் தாய் மீண்டும் ஆசிரியத் துறையில் இறங்கலாம். மணமான ஒருவர் கட்டாயம் உத்தியோகம் பார்க்க வேண்டிய பொருளாதார நெருக்கடி ஏற்பட்டால் இச் சிரமங்களைச் சாமர்த்தியமாகச் சமாளிக்க வேண்டியதுதான்.

கே:- குழந்தைகளின் பொருட்டு ஆசிரியைத் தொழிலைக் கைவிட்டுப் பின்னர் குழந்தைகள் வளர்ந்ததும் வேலை தேடுவது பெரும்பாடாக இருக்கிறதே!

ப:- இதைப் பற்றி நானே சொல்ல நினைத்தேன். அதற்குள் நீங்கள் கேட்டு விட்டீர்கள். மணமான ஆசிரியைகளின் சேவை நமக்குப் பெருந் தேவையாக இருக்கிறது குழந்தைகளுக்காக ஆசிரியைத் தொழிலைக் கைவிட்டால் மாணவருக்குப் பெரும் கஷ்டமாகி விடும். ஆசிரியைகளின் அந்த ஈகாலச் சேவையும் பயனற்றதாகிவிடும். என்விருப்பமென்னவென்றால் இத் தருணத்தில் அரசாங்கம் உதவிக்கு முன்வரவேண்டும் எனது கருத்தைப் பலர் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் இச்சந்தர்ப்பத்தில் அதனைத் தெரிவிக்க விரும்புகிறேன். மணவாழ்க்கைக்காகத் தற்காலிகமாக விட்ட தொழிலை மீண்டும் தொடரவும், அவர்களின் முன்னைய சேவைக் காலத்தையும் கணக்கில் எடுத்துப் பென்ஷன் திட்டத்திற் சேர்த்துக் கொள்வதும் போன்ற ஏற்பாடுகளை அரசாங்கம் செய்யவேண்டும். இம்முறை மேலுடுகளில் உண்டு. நாமும் அவற்றைப் பின்பற்றினால் மணமான ஆசிரியைகளுக்குப் பெரும் உதவியாக இருக்கும். எத்தனையோ ஆற்றல் வாய்ந்த பெண்களின் சேவையையும் நாடு இழக்க நேரிடாது.

கே:- நமது நாட்டுப் பெண்கள் சிறப்பாகத் தமிழ்ப் பெண்கள் வேறுஎந்தத் துறைகளிற் சேவை செய்யலாம்?

ப:- பல்வேறு துறைகள் இருக்கின்றன. குடிசைக் கைத்தொழில்கள், சமூகநல சேவை, போன்றவற்றில் ஈடுபட்டு உழைக்கலாம்.

கே:- இங்குள்ள பெண்கள் அத்துறையில்ஈடுபட்டு உழைக்கிறார்களா?

ப:- அதுதான் இல்லை. மிகவும் வருந்த வேண்டிய ஒரு நிலை இது. தன் வீடு, தன் வேலை என்று இருந்து விடுகிறார்கள். பிறரைப் பற்றி எண்ணுவதே மிகக்குறைவு. பெண்கள முன்வந்தால் எத்தனையோ வேலைகள் சிறப்புடன் நடைபெறும். ஆஸ்பத்திரிகளில் காசநோய் தடுப்பு இயக்கம், நெசவு, பின்னல் போன்ற குடிசைக் கைத் தொழில்களிலும் சிறிது முயற்சியுடன் ஈழத்தைக் கட்டியாளும் சமூகம் முன்னேற

(8 ம் பக்கம் பார்க்க)

சீதன முறை ஒழிய மன மாற்றம்தான் தேவை

—சஸ்வரி—

சகோதரிகள் 'திருமகளும்' 'புதுமைப் பெண்'ணும் சீதன வழக்கதை ஒழிப்பதற்கு ஒவ்வொரு வழியை நமக்குக் காட்டித் தந்திருக்கிறார்கள். அவ்வழிகள், அவசியம் நேர்ந்தால் மணமாகாமலே வாழ்காலைக் கழிக்கக்கூடிய சூழ்நிலையில் உள்ளவர்களுக்கே உகந்தவை. இத்தகைய சூழ்நிலையில் உள்ளவர்கள் விரல்விட்டு எண்ணக் கூடிய தொகையினரே. ஆகவே அவர்கள் இவ்வழிகளைக் கையாண்டு அதன்பயனைத் தம் வாழ்வைத் தியாகம் செய்வதால் மற்றச் சகோதரிகளுக்கு அதிக நன்மை எற்படும் என நம்புவதற்கு இடமில்லை. வீணாக, "படித்த செருக்கு," "செல்வச் செருக்கு" என மற்றையோர் இகழ்வதுதான் அவர்கள்கண்ட பலனை முடியவும் கூடும். அது போக, பேரம்பேசிப் பெண் எடுக்கும் மானங்கெட்ட மனிதன் விவாகப் பதிவுத்தினம் வரைக்கும் பெண்ணுக்குள்ள தகுதிகள், பண வசதிகள் முதலியனவற்றை அறிந்து கொள்ளாமலா இருக்கப்போகிறான். பணத்துக்காகத் தன்னை விலை கூறும் அந்த ஆடவன் 'புதுமைப் பெண்' கேட்கும் அந்தக் கேள்விக்கு "உன்னைத்தான், காதல்கொண்டுவிட்டேன்....." எனப் பல புளுகுகளை அவிழ்த்துப் பெண்ணையும் அவள் பெற்றோரையும் பரவசப்படுத்திப் பணம் பறிக்கத்தெரியாத அப்பாவியாக இருப்பான் என்பது என்ன நிச்சயம்?

நாமேன் நமது கல்யாணப் பதிவுத் தினம்வரைக்கும் பொறுத்திருத்தல் வேண்டும். இந்த ஆண்களுக்குத் திருமணம் வியாபாரமல்ல; "ஒத்த குணம், ஒத்த கல்வி, ஒத்த பண்பாடு இவைதாம் விவாகமொன்றின் முக்கியமானது;" வேண்டுமானால் ஒத்த ஜாதகத்தையும் முக்கியமாக்கிக் கொள்ளலாம் என்பதைவிளக்கி நாமும் அதை உணர்ந்து, சீதனவழக்கத்தை அடக்கி ஒடுக்கி, இறுதியில் அழித்தேவிட வழிவகைகளை வகுத்து, நடை முறையிற் கொண்டுவர இன்றே தொடங்குவோம்.

செய்வதென்ன?

இதற்கு என்ன செய்யலாம்? சீதனம் பெறுவதையும் கொடுப்பதையும் சட்டவிரோதமாக்க அரசாங்கத்தை நிர்ப்பந்திக்கலாமா? பொதுமக்களின் ஒத்துழைப்பில்லாமல் எந்தச் சட்டத்தையும் எந்த அரசாங்கமும் வெற்றிகரமாக அமுல் நடத்த முடியாது. ஆகவே சீதன வழக்கத்தை அடியோடு அழிக்கவேண்டுமாயின், அதற்கெதிராகப் பொதுஜன அபிப்பிராயம் உண்டுபண்ண வேண்டும்.

நோய் எங்கு இருக்கிறது? எப்படிப் பரவுகின்றது என்று தெரிந்து கொண்டால்தான் வைத்தியம்செய்யலாம். இந்தச் 'சீதன வழக்கமென்னும் நோய் இன்றைய சமூகத்திற் பரவுவதற்கு மாப்பிள்ளைகள் மாத்திரமே குற்றவாளிகள் அல்ல எனப் 'புதுமைப்பெண்' கூறுவது முற்றிலும் உண்மை. கல்யாணமாக இருக்கும் கன்னியர்கள், காளையர்கள் அவர்கள் இருபாலாரினதும் பெற்றோர்கள், சகோதர, சகோதரிகள், உறவினர்கள், நண்பர்கள், கல்யாணத் தரகர்கள் எல்லாருமே இக்குற்றத்திற் பங்குபற்றுபவர்கள்.

வேறுபெண்ணைக் கட்டிவைத்தார்

ஒரு மாமி, தன் சகோதரனின் மகளையே தன் மகனுக்குப் பெண்ணை எடுக்க நெடுங்காலமாக நினைத்திருந்தவர். உலகமகாயுத்தம் வந்ததும் கணவன் "கள்ளச் சந்தை"யில் பணம் ஏராளமாகச் சம்பாதித்துவிட்டார். முதல் சேர்ந்திருந்ததால் மகனும் தனி வியாபாரம் தொடங்கினார். தன் மருமகள் கொண்டுவரக்கூடிய சீதனம் தன் மகனின் அந்தஸ்துக்குப் போதாதெனப் புதுப் பணக்கார மாமிக்குத் தோன்றியது. அவர் அண்ணன் மகளைப் புறக்கணித்து மகனுக்கு வேறு பெண்ணைக் கட்டிவைத்தார்.

ஒரு சகோதரி, ஒரு பள்ளிக் கூடத்தில் ஆசிரியை. அங்கு படித்துக்கொண்டிருந்த ஒரு பெண் நல்ல பணக்காரி. ஆனால் வேறு எல்லாவிதத்திலும் தம் குடும்ப அந்தஸ்துக்குக் குறைந்தவள் என்பது நன்றாகத் தெரிந்தவர். ஆனால் அப்பணத்துக்கு ஆசைப்பட்டு அவர் அப்பெண்ணைத் தம் சகோதரனுக்கு மணமுடித்து வைக்கிறார். பின்பு ஆசிரியையின் குடும்பத்தினர் முழுப் பேருமே பெண்ணின் அந்தஸ்துக் குறைவைச் சுட்டிக்காட்டி அவளை அவளின் பெற்றோரோடு அதிக உறவு வைக்கவும்விடாது தடுக்கின்றனர். இவ்வகை மனத்தினால் எவருக்குமே மகிழ்ச்சி கிட்டமுடியாது.

ஒரு வாலிபன் ஒரு பெண்ணை வெகுகாலமாகக் காதலிக்கிறான். பெண்ணின் தந்தை நல்ல உத்தியோகத்தில் இருந்தவர் திடீரென இறந்துவிட்டார். அவர் உயிரோடிருக்கும்போது மகளின் வேண்டுகோளுக்கிணங்கி அவளுக்குப் பெருந்தொகை சீதனம் கொடுக்க ஒப்புக்கொண்டிருந்தார். அவர் இறந்ததால் பெண்ணுக்குப் பிள்ளைப்பங்கு மாத்திரமே வரக்கூடியதாக இருந்தது. அவளின் காதலெல்லாம் கனவாகி விட்டது. உறவினர்களினதும், நண்பர்களினதும் புத்திமதியைக் கேட்டுத் தனதுகாதலன், பணக்காரப் பெண் வேட்டை தொடங்கியிருப்பதைக் காண்கிறாள்.

ஒரு தந்தை, சீதன வழக்கத்

(7ம் பக்கம் பார்க்க)

தெய்வ வழிபாட்டிற்கும்
உங்கள் இல்லங்களில் நறுமணம் கமழ்வதற்கும்
33
303
3003
ஊதுபத்திகளை
உபயோகியுங்கள்.
யாழ்ப்பாணத்தில் ஸ்டாக்கிஸ்டுகள் தேவை.
தயாரிப்பவர்கள்:
எஸ். வி. முருகேசன் அன் சன்ஸ்,
பெங்களூர்-2.
சோல் ஏஜண்டுகள்.
ஜெகஜோதி அன் கோ.
குரு தனிய.

யாழ்ப்பாணக் கல்லூரி விளையாட்டுப்போட்டி

3 புதிய சாதனைகள் ஸ்தாபிக்கப்பட்டன

மாவிட்டபுரம், புதன்

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் வருடாந்த விளையாட்டுப்போட்டி சென்ற சனிக்கிழமை கல்லூரி அதிபர் திரு. கே. செல்லையா தலைமையில் நடைபெற்றது.

பிறவுன் இல்லம் 175 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தை அடைந்தது. கிச்கொக் இல்லம், கெஸ்டிங் இல்லம், ஏபிரகாம் இல்லம் ஆகியன முறையே 140 2/1, 135 2/1 106 புள்ளிகளைப் பெற்று 2-ம், 3-ம், 4-ம் இடத்தைப் பெற்றன. இப்போட்டியின் போது மூன்று புதிய சாதனைகள் ஸ்தாபிக்கப்பட்டன. சிரேஷ்ட பிரிவைச் சேர்ந்த மா. தவயோகராசா என்பவர் 120 யார் தடை தாண்டிப் பாய்தல் ஓட்டத்தை 16.4 வினாடிகள் ஓடி ஓர் புதிய சாதனை நிலைநாட்டினர். பாதி வட்டம் எறிதலில் பரராச சேகரம் என்பவர் 116 அடி எறிந்து புதிய சாதனையை நிலைநாட்டினர். 110×4 யார் அஞ்சலோட்டத்தில் பிறவுன் இல்லத்தினர் 48.8 வினாடியில் ஓடி பழைய சாதனையை முறியடித்தனர்.

அஞ்சலோட்டத்தில் பிறவுண் இல்லத்தினரும் கிச்கொக் இல்லத்தினரும், கூட்டுச் சம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

அணிவகுப்பு மரியாதையில் கிச்கொக் இல்லம் முதலிடத்தைப் பெற்றது. ஆண்களுக்கான கயிறிழுத்தற் போட்டியில் கெஸ்டிங் இல்லம் முதலிடத்தைப் பெற்றது. பெண்களுக்கான கயிறிழுத்தற் போட்டியில் ஏபிரகாம் இல்லம் முதலிடத்தைப் பெற்றது.

'சாம்பியன் கப்' பெற்றவர்களின் விபரம் பின்வருமாறு:-

உயர்சிரேஷ்ட பிரிவு:- சபா பதிப்பிள்ளை.

சிரேஷ்டபிரிவு: மா. தவயோகராசா, சி. சரோஜாதேவி.

மத்தியபிரிவு: ப. இராசநாதன், இ. சாந்தி.

கனிஷ்டபிரிவு:- அ. பாக்கியநாதன். க. சிவராணி.

பாடசாலைக்கு விளையாட்டு மைதானம்

அரசாங்கத்திடம் அனுமதிக் கோரிக்கை

அச்சுவேலி, வெள்ளி

அச்சுவேலி வடக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு அருகாமையில் இருக்கும் முடிக்குரிய நிலத்தில் அக்கல்லூரிக்கான விளையாட்டு மைதானத்தை அமைக்க அனுமதி தருமாறு அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானம் ஒன்று அப்பாடசாலை பெற்றூர் ஆசிரிய சங்கக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்துக்கு திருமதி. பபி நாயகி நல்லதம்பி தலைமை வகித்தார்.

கனேபோ பொப்லின்

ஆமாம், நாளாந்தம் கடினமாக உழைப்போர்க்கு உகந்த சிறந்த கடின மான, நன்கு பாவிக்க வல்ல புடவை இதுவே! கனேபோ பொப்லின் பாடசாலை யூனிபோம்களுக்கும் கந்தோர் ஷர்ட்டுகளுக்கும் மிகச் சிறந்தது. வெள்ளையிலும், மென்மையான பல வண்ணங்களிலும் கிடைக்கும். சாயம் போகாது என்பதற்கு உத்தரவாதமுடையது.

ஏகவினியோகஸ்தர்கள்: எல். டப்ளியூ. ஈ.

விற்கும்மிடம்: எல். டப்ளியூ. ஈ. இலாகா ஸ்டோர், கோட்டை, கொழும்பு. மக்கலம் ரோட் மெயின் வீதி, புறக்கோட்டை, மருதானை மற்றும் வெளியூர்கள்.

ஞாபகமிருக்கட்டும் எல். டப்ளியூ. ஈ. CWE தரத்திலும் ரகத்திலும் சிறந்ததைத் தருகிறது.

CWE/TX/1

சாவகச்சேரி மகளிர் கல்லூரி விளையாட்டுப் போட்டி முடிவுகள்

சாவகச்சேரி, புதன்

சாவகச்சேரி அரசினர் மகளிர் கல்லூரி வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகள் கல்லூரி அதிபர் செல்வி வாலாம்பிகை கலாசபை தலைமையில் நடைபெற்றது.

மொத்த விளையாட்டுக்களில் 102 புள்ளிகளைப் பெற்ற அருந்ததி இல்லம் இவ்வருடச் சாம்பியனாக வெற்றியீட்டியது. ஏனைய இல்லங்களான தேவகி இல்லம் 70 புள்ளிகளையும், ஜானகி இல்லம் 83 புள்ளிகளையும் பெற்றன.

வெற்றி பெற்றோர் விபரம்:-

ஆரம்ப பிரிவு: 50 யார் ஓட்டம். செல்விகள். கே. பூமணி, டி. சந்திரநாயகி, எஸ். நவமணி.

சாக்கோட்டம்: செல்விகள். கே. பூமணி, எஸ். நவமணி, ஆர். ஜெயராணி.

கனிஷ்டபிரிவு: 75 யார் ஓட்டம்: செல்விகள். ஆர். புஷ்பராணி, வி. முத்துப்பிள்ளை, ஆர். இராசமலர்.

சிரேஷ்டபிரிவு: 100 யார் ஓட்டம்: செல்வி. கே. ஜெகதாம்பிகை.

440 யார் ஓட்டம்: தேவகி இல்லம், அருந்ததி இல்லம், ஜானகி இல்லம்.

கனிஷ்ட பிரிவு 440 யார் ஓட்டம்: அருந்ததி இல்லம், ஜானகி இல்லம், தேவகி இல்லம்.

வட்டாரவித்தியாதரிசி திரு. ஜே. எஸ். அருமைநாயகம் வெற்றி பெற்ற மாணவிகட்குப் பரிசில்களை வழங்கினர்.

விளையாட்டுப் போட்டிகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

கொழும்பு சென். பெனடிக்ஸ் கல்லூரிக்கும், யாழ்ப்பாண தெரிவுக்கோஷ்டிக்கு மிடையே யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற பாஸ்கட் பந்துப்போட்டியில், சென்பட்ரிக்ஸ் கோஷ்டி 32 புள்ளிகளால் வெற்றியீட்டியது.

∴ ∴ ∴

யாழ்ப்பாணம் மத்தியகல்லூரிக்கும், சென்பட்ரிக்ஸ் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற பாஸ்கட் பந்தாட்டப் போட்டியில், யாழ்மத்திய கல்லூரி 40 புள்ளிகளால் தோல்வியுற்றது. சென்பட்ரிக்ஸ் கோஷ்டி 64 புள்ளிகளையும், யாழ் மத்திய கல்லூரி 24 புள்ளிகளையும் பெற்றன.

∴ ∴ ∴

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரி மாணவர் கோஷ்டிக்கும் சென்பட்ரிக்ஸ் கோஷ்டிக்கு மிடையே நடைபெற்ற பாஸ்கட் பந்தாட்டப்போட்டிவெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. இருகரப்பினரும் தலா 40 புள்ளிகளைப் பெற்றனர்.

∴ ∴ ∴

கொல்லங்கலட்டி விளையாட்டுக் கழகத்திற்கும், போயிட்டி விளையாட்டுக் கழகத்திற்கு மிடையே நடைபெற்ற தாச்சிப் போட்டியில், போயிட்டி விளையாட்டுக் கழகம் 11—6 புள்ளிகளால் வெட்டியீட்டியது.

விமானத்தில் ஒரே ஒரு பிரயாணி

காங்கேசன்துறை, வியாழன்

கொழும்பிலிருந்து சென்னை செல்லும் "ஏயர் சிலோன்" விமானம் காங்கேசன்துறையில் இருந்து குறிப்பிட்ட நேரத்திற்கு இரண்டரை மணி நேரம் தாமதித்துப் புறப்பட்டது. ஒரே ஒரு பிரயாணியுடன் காங்கேசன்துறை வந்தடைந்த விமானம் இயந்திரக் கோளாறு காரணமாகத் தாமதித்தது.

ரூ.150 அபராதம்

யாழ்ப்பாணம், வெள்ளி

ஒன்றரைப் போத்தல் உள்ளூர் வடிசாராயம் வைத்திருந்ததாக கோண்டாவிலைச் சேர்ந்த வெள்ளையன் கணபதி என்பவர்மீது குற்றஞ்சாட்டி கோப்பாய் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. ஆர். தேவசகாயத்தினால் யாழ்ப்பாணம் மாஜிஸ்ரேட் கோர்ட்டில் தொடரப்பட்ட வழக்கில் நீதவான் திரு. அரசுவாலடன் எதிரிக்கு 150 ரூபாய் அபராதம் விதித்தார்.

வானொலி நிகழ்ச்சிகள்

கொழும்பு

வெள்ளி 21-7-61

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 காலைக்கதிர், 7-30 திரைஇசை 7-45 வி. கே. ஆறுமுகம் —பக்திப்பாடல்கள், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம் 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்தினவாழ்த்துக்கள், 5-15 எல். குருசாமி—நாகஸ்வரம், 6-15 கிராமசஞ்சிகை, 6-45 கோட்டுவாத்தியம்.

இரவு 7-00 கூட்டுப்பிரார்த்தனை —அஞ்சல், 7-30 நேயர் விருப்பம், 8-00 இஸ்லாமிய நிகழ்ச்சி, 9-15 பேச்சு, 9-30 ஏ. எஸ். நாராயணன்—பாட்டு, 10-15 தேர்ந்த இசை.

திருச்சி

(செய்திகள்: காலை 7-15 பகல் 2, இரவு 7-15)

காலை 7-00 இசைக்கதிர் 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள் 7-30 பதுச்சத்திரம் கே. முத்துவீரபிள்ளை—நாகஸ்வரம்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 நடுத்தரப்பள்ளிகளுக்கு, 1-00 பெண்ணுலகம், 1-30 வாத்திய இசை, 1-50 குரல் இசை, 2-10 உயர்தரப் பள்ளிகளுக்கு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடகசங்கீதம்) 5-45 காந்திகதை, 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 கே. வேங்கட ராமய்யா வி. தியாகராஜன், —வயலின், 9-15 பலகனி, 9-30 மெல்லிசை மெட்டுகள், 9-45 இசை மாலை.

4 பிள்ளைகளின் தாய் தற்கொலை

அலுக்ப்பிட்டி, வியாழன்

இரு ஆண்களையும், இரு பெண்களையும் பெற்றெடுத்த 40 வயது நாகம்மா என்ற பெண் கிருமிநாசினி அருந்தித் தற்கொலைசெய்துகொண்ட பரிதாப சம்பவம் மண்கும்பான் மேற்கில் நடந்தது. குடும்பத்தில் ஏற்பட்ட மனக்கசப்பே தற்கொலைக்குக் காரணமென்று தெரிவிக்கப்பட்டது. ஊர்காவற்றுறை வைத்திய அதிகாரி திரு. இராசரத்தினம் பிரேத பரிசோதனை நடத்தினர். மரண விசாரணை செய்த திடீர்மரண விசாரணை அதிகாரி திரு. வ. செல்லத்துரை தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

மாணவரின் எதிர்பாராத அதிர்ஷ்டம்

உடுப்பிட்டி, செவ்வாய்

எஸ். எஸ். சி. வகுப்பில் ஒரு மாணவன் மூன்று ஆண்டுகளுக்கு மேல் படிக்கமுடியாதென்றும், அதுவும் அவன் விஞ்ஞான பாடங்களெடுக்கும்மாணவனாயின் அவன் 4 வருடங்களுக்கு மேல் அவ்வகுப்பில் இருக்க முடியாதென்று கல்வித் திணைக்களம் விடுத்த கட்டளையின் விளைவாக சில பாடசாலைகள் எல்லா மாணவரையும் எஸ். எஸ். சி. பரீட்சையெடுக்க அனுமதிக்கலாமென தெரிகிறது.

பிரயாணப்படி நிறுத்தப்பட்டது

கொழும்பு, வியாழன்

அரசாங்கம் மேற்கொண்டிருக்கும் சிக்கன நடவடிக்கையின் விளைவாகச் சில அரசாங்க இலாகாக்களில் அடுத்த நிதிவருடத்திற்கான பிரயாணப் படியை அரசாங்கம் நிறுத்தி வைத்திருப்பதாகத் தெரியவருகிறது.

பிரயாணப் படி வழங்கும் முறையைத் திருத்தி அமைப்பதற்காக, அரசாங்க ஸ்தாபனங்களும் கார்ப்பரேஷன்களும் தங்கள் தேவைக்காக உபயோகிக்கும் மோட்டார் வாகனங்களின் மூழு விபரங்களையும் தருமாறு திறைசேரி உதவிக் காரியதரிசி கேட்டிருக்கிறார். அரசாங்க இலாகாக்களும், கார்ப்பரேஷன்களும் இவ்வாண்டு ஜூன் 30க்கு இடையிலான பிரயாண விபரங்களையும். பிரயாணப் படி சம்பந்தமான கணக்குகளையும் இம்மாத இறுதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

கல்வயல் பலநோக்கு சங்க நிர்வாகிகள்

சாவகச்சேரி, புதன்

கல்வயல் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் அதன் தலைவர் திரு. வி. விஜயகமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. பின்வருவோர் புதுவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பெற்றனர்.

தலைவர்: திரு. வி. விஜயகமூர்த்தி, உபதலைவர்: திரு. எம். வேலுப்பிள்ளை. காரியதரிசி: திரு. கே. சின்னத்தம்பி, நிருவாகசபை அங்கத்தவர்கள்: திரு. வி. சிதம்பரப்பிள்ளை, திரு. பி. இராசரத்தினம், திரு. கே. சிதம்பரப்பிள்ளை, திரு. கே. பொன்னம்பலம். திரு. ஆர். பசுபதி, திரு. எஸ். விஜசித் தம்பி.

தந்தி மூலம் லிகிதர் இடமாற்றம்

கொழும்பு, வியாழன்

விவசாய சேவைப் பகுதி உதவிக் கமிஷனர் இலாகாவில் இருந்து அனுராதபுரக்கச்சேரிக்கு தந்தி மூலம் இடமாற்றம் செய்யப்பட்டிருக்கும் பிரதம லிகிதரை திரும்பவும் விவசாய இலாகாவுக்கு அனுப்பி வைக்கும்படி அனுராதபுர மாவட்டத்தைச் சேர்ந்த மூன்று எம்.பி.க்கள் விவசாய மந்திரியைக் கேட்டிருக்கிறார்கள்.

யாழ்ப்பாணம் இளம் எழுத்தாளர் சங்கம்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் இளம் எழுத்தாளர் சங்கம், இளம் எழுத்தாளர்களுக்கெனச் சிறுகதைப் போட்டி ஒன்றை ஏற்டுத்தியுள்ளது.

உரும்பிராயில் கதிர்காம உற்சவம்

உரும்பிராய், வியாழன்

கதிர்காம உற்சவத்தைஉரும்பிராய் சிதம்பர கப்பிர மணிய சுவாமி கோவிலில் கொண்டாடி வருகிறார்கள்.

கதிர்காமத்தில் நேர்த்திக் கடன்களை முடிக்கபிரார்த்தித்த பலர் தத்தம் நேர்த்திக்கடன்களை இந்த ஆலயத்திலே நிறைவேற்றுகின்றார்கள்.

தீர்த்தோற்சவ தினமாகிய வெள்ளிக்கிழமை முருகனைத் தீர்த்தமாட்டுவிக்கப் பெறும். இதற்கெனப் புதிதாக ஓர் விக்கிரகம் செய்யப்பட்டுள்ளது. அடியார்களுக்கு அன்னதானம் வழங்கவும் தர்ம கர்த்தாக்கள் ஆயத்தங்கள் செய்கின்றனர்.

போத்தல் கள்ளு

கொழும்பு, வியாழன்

இரண்டரை வருடங்களுக்கு வைத்திருக்கக்கூடிய போத்தலில் அடைக்கப்பட்ட கள்ளு விரைவில் மதுபானக் கடைகளில் விற்பனைக்கு வருமென்று கூறப்படுகிறது.

அதிக டீஸல் என்ஜின்களை உபயோகிக்குமாறு கமிட்டி கருத்து

கொழும்பு, வியாழன்

தூர இடங்களுக்கான பிரயாணங்களில் அதிக வசதிகளேற்படுத்த இயன்றவரை டீஸல் எண்ணெயில் இயங்கும் ரயில்வே என்ஜின்களை உபயோகிக்கவேண்டுமென ரெயில் பரிசோதனை கமிட்டி கருத்து தெரிவித்துள்ளது.

கொழும்புத் திட்டத்தின் கீழ் கனடாவிலிருந்து இவ்வருடம் இங்கு வரும் 2 டீஸல் ரெயில் என்ஜின்களால் இது சாத்தியமாகலாம் என கமிட்டி மேலும் தெரிவித்துள்ளது.

மங்கையர் உலகம்

சீதன முறை ஒழிய...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

தையே, தன் பெண்களைப் பொறுத்தவரையில், விஷமென வெறுப்பவர். தம் ஆண் பிள்ளைகளுக்குத் தாமே முன்னின்று பேரம்பேசிச் சீதனம் எடுத்துக் கல்யாணம் செய்துகொடுக்கிறார்.

முக்கிய காரணம்

இப்படியே பார்த்துக்கொண்டுபோனால் சீதன வழக்கக் கொடுமைக்கு உதாரணங்கள் பல கூறலாம். இந்த மானம் கெட்ட செய்கைகளுக்கு மூல காரணங்கள் எவை? ஓரளவில் பணத்தாசை முக்கிய காரணம். பெண்ணின் அந்தஸ்தை அவளுக்குக் கொடுக்கப்படும் சீதனத்தில் இருந்தும் மதிக்கும் நிலை மாறவேண்டும். சீதனம் கேட்டு வாங்குபவர்கள் கையேந்திப் பிச்சையெடுப்பவர்களைவிட இழிவானவர்கள்என நமது சமூகத்தை உணரச் செய்தால் இத்தகைய போலிக் கௌரவம் மறைய இடமுண்டு.

'திருமகளும்,' 'புதுமைப் பெண்ணும்' எண்ணுவதுபோல் பெண்கள் துணிந்தால் சீதனத்தை முற்றாக ஒழித்துவிடலாம் என்றே நம்புகிறேன். பத்திரிகைகள்மூலமும் சங்கங்கள் மூலமும் சீதன ஒழிப்புக்குப் பலம் தேடவேண்டும். தனிப்பட்ட முறையிலும் சந்தர்ப்பம் கிடைக்கும் பொழுது சிறிது பிரசாரம் செய்யலாம். தாயாக, சகோதரியாக இருப்பவர்கள், தங்கள் குடும்பத்துக்கு வரும்பெண் தங்களுக்கு ஒத்த பண்புடையவளாக இருப்பதை முக்கியமாகக் கருதி, பணத்தைப்பற்றிய பேச்சே எடுப்பதில்லையெனத் தீர்மானிக்கலாம். எங்கள் வீடுகளில் சீதனம் விரும்பும் ஆண்களிருந்தால், அவர்களும் மானமாக வாழவேண்டும். பிறர் தேடிய பொருளை நம்பிக் குடும்பம் தொடங்காமல் தம் கால்களில் நின்று முன்னேறத் துணிந்து முயற்சி செய்யவேண்டும். ஒருவனுக்கு வாழ்க்கைத் துணைவியாக வருபவளைப் பெற்று வளர்த்த தகப்பனருக்குக் கஷ்டம் கொடுத்துப் பெண்ணைப் பெற்றதற்காக அவரை வருந்தவிடக்கூடாது. பெற்றோரிடமிருந்து எவ்வளவு பொருள் பெறமுடியுமோ அவ்வளவையும் பெறுவோம் என நினைக்கும் பெண்களும் மனம் மாறவேண்டும். இந்நிலைமாறி மணமாக இருக்கும் ஒவ்வொரு பெண்ணும், தன் பெற்றோர் தனக்குத் தேர்ந்தெடுக்கும் மாப்பிள்ளை தன்னை வாழ்க்கைத் துணைவியாகக் கருதி மணம்முடிப்பவராக இல்லாமல் தன் சீதனத்தை வாழ்க்கைக்குத் துணையாக்கும் நோக்கத்தோடு வரும் வரனாக இருந்தால், தான் அவரை மணக்கத் தயாரில்லை என்பதைப் பெற்றோரிடம் நேரகாலத்துடன் சொல்லி விடல்வேண்டும்.

அவரின் கதை

பணத்தை மட்டும் கருதி பெண்ணின் மற்றைய தகுதிகளுக்காக அவளை மணம்செய்யும் ஆண்கள் எங்கள் சமூகத்தில் அடியோடு இல்லையென்று சொல்லிவிடமுடியாது. ஆனந்தமான இல்வாழ்க்கை நடாத்தும் ஒருவர் தாம், தம் மனைவியைத் தேர்ந்தெடுத்த கதையைக்கூறுகிறார். "நான் கொஞ்சம் வசதிகுறைந்த குடும்பத்திற் பிறந்து, பிரயாசப்பட்டு நல்ல நிலைக்குவந்தவன். பெரும் பதவி பெற்றதும் பலரும் எனக்குப் பெண் கொடுக்க முன்வந்தனர். கல்யாணம்பேசி வந்தவர்களெல்லோரும், பெண்ணுக்கு எவ்வளவு சீதனம் கொடுக்கப்படும் என்பதையே விபரமாகக் கூறினர். இப்பொழுது என் மனைவியாக இருப்பவருக்காகத் தூதுவந்தவர் அவளைப் பற்றியும், அதற்கடுத்தபடியாக அவளின் பெற்றோர் சுற்றத்தார்களைப்பற்றியதுமான விபரங்களுக்கே முக்கியத்துவம்கொடுத்தார். இல்லற வாழ்வுக்கு முக்கியம் நல்லமனைவிதான். (அவள் கொண்டுவரும் பொருளல்ல) என எனக்குத் தோன்றியதால் நான் அவளை மணப்பதற்கு உடனே சம்மதம் தெரிவித்துவிட்டேன்.

இத்தகைய மனப்பான்மை வாலிபர்களிடையே வளரச் செய்தல்வேண்டும். இதற்கு நாம் நம்சகோதரர்களைச் சீதன ஒழிப்புச் சங்கங்கள் நிறுவவும் அவற்றில் அங்கத்தவர் ஒவ்வொருவரும், "பெண்ணுக்கு அவளின் பெற்றோர்மனமுவந்து கொடுக்கும் பொருளை மாத்திரமே நான் பெறுவேன். எனது நண்பர்களும் இவ்விதம்செய்ய நான் ஊக்குவிப்பேன்" எனப் பிரதிக்ஞை செய்து, அதன்படி ஒழுகச் செய்யவும் நாம் முயற்சிக்கவேண்டும்.

கூட்டு முயற்சியாக, இடையில் தளராமல் எல்லாக்கோணங்களிலிருந்தும் சீதன வழக்கத்துக்கு எதிர்ப்புஏற்பட்டால் எங்கள் சமூகத்தில் ஆழமாக வேருன்றிய இந்த இழிவான வழக்கம் நாளடைவில் நலிந்து நசுங்கிவிடும். அப்பொழுது தான் இல்லறம் நல்லறமாகும். ஒவ்வொரு விவாகமும் ஒரு புதுக்குடும்பத்தை உருவாக்கும்.

சமூக சேவையும்....

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

முண்டு. அத்துடன் நாட்டின் பொருளாதார நிலையும் விருத்தியடையும். உயர் கல்வி கற்ற மங்கையர்கூடத் தமது அறிவை நாட்டிற்குப் பயன்படுத்தத் தயங்குகிறார்கள். இந் நிலை விரைவில் மாறவேண்டும். மேனாட்டவர் காட்டும் சிரத்தைபோல் நாமும் சமூகசேவையில் ஆர்வம் காட்டவேண்டும் அப்போது தான் சமூகப் பிரச்சினைகளும் பொருளாதார நெருக்கடிகளும் குறையும். நாமும் உதவி செய்கிறோமே என்ற மனத்திருப்தியும் பெண்களுக்கு ஏற்படும்.

மகத்தான 2 -வது வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெம்பிளி (கண்டி)

நவா (கொம்பனித்தெரு) மொடர்ன் (பதுளை) விஜிதா (மஸ்கேலியா)

ஜெமினி கணேசன், பத்மினி
கே. ஏ. தங்கவேலு, மனோரமா
எஸ். நடராஜன்

மற்றும் பலர் நடித்த

மதுரம் பிக்சர்ஸ்

மீண்ட சொர்கம்

கதை, வசனம், டைரக்ஷன்
ஸ்ரீதர்

பின்னணி: ஏ. எம். ராஜா, சீர்காழி கோவிந்தராஜன், ஜிக்கி, எம். எல். வசந்தகுமாரி

மக்கள் கண்குளிர, இதயம் மகிழ, கலையும், பண்பும் இணைக்கப்பட்ட அருமையான அமைப்பு

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி மாலை 5-15 மணிக்கு மட்டும்
சனி, ஞாயிறு காலை 10 மணி பி. ப. 1-30
மாலை 5-15 மணிக்கும்

எம். ஆர். ராதா - எம். என். ராஜம்
நடித்த
ரத்தக் கண்ணீர்

மனோஹரா (யாழ்ப்பாணம்)
தினசரி காலை 10-00 மணிக்கும்
மாலை 5-45மணிக்கும்

தங்கவேலு - பி. கே. சரஸ்வதி
நடித்த
மேதாவிகள்

தினசரி பி. ப. 2 மணிக்கும் 3-45 மணிக்கும்
லொஸ்ட் வேல்ட்
(ஆங்கிலம்)
LOST WORLD

இப்பொழுது திரையிடப்படுகிறது!
ராணி சினிமா (யாழ்ப்பாணம்)
காலை 10 மணி, பி. ப. 2 மணி
மாலை 5-15 மணிக்கும்

புரட்சி நடிகர் எம். ஜி. ஆர்.
கன்னடத்துப்பைங்கிளி சரோஜாதேவி
நடித்த
திருடாதே!

தென்னிந்தியாவிலும் மற்றும் பல இடங்களிலும் அதிவெற்றி வாகை சூடிக்கொண்டிருக்கும் மகோன்னத தயாரிப்பு!

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்
1961 ம ஆண்டு ஜூலை மாதம் 21-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது